பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 10 வியாழக்கிழமை (26-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:303

# புலிகளின் தரப்பிலும் தனியாக சமாதானச் செயலகம் அமைப்பு!

## நோர்வேத் தூதுவர் நேற்று வன்னியில் தமிழ்ச்செல்வனுடன் விரிவாகப் பேச்சு

வவுனியா,செப்ரெம்பர்26

**தற்போதைய அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரசுத் தரப்பில் சமாதானச் செயலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்ற சமாதானச் செயலகம் ஒன்று விடுதலைப் புலிகள் தரப்பிலும் தனியாக அமைக்கப்படவிருக்கின்றது.**

**நேற்று கிளிநொச்சிக்கு சென்றிருந்த கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க், அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சுக்களில் சமாதானச் செயலகம் அமைப்பது பற்றிய விடயம் முக்கிய இடத்தைப் பெற்றதாகத் தெரியவந்தது.**

ஜோன் வெஸ்ட்போர்க் நேற்றுக் காலை 8.30 மணிக்கு வவுனியாவில் இருந்து விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சிக்கு புறப்பட்டுச்சென்றார்.

கிளிநொச்சியில் காலை 9 மணி முதல் 10.30 மணிவரை சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் பிரதிநிதிகள் குழுவினருடன் அவர் விரிவாகப் பேச்சு நடத்தினார்.

புலிகளின் தரப்பில் சமாதானச் செயலகம் அமைப்பது குறித்து இந்தப் பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை அரசுத் தரப்பிலும் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக சமாதானச் செயலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)



சாகும்வரை உண்ணா நோன்பிருந்து வீரச்சாவடைந்த தியாகி திலீபனின் பதினைந்தாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.

வடக்கு - கிழக்கில் இந்தியப்படைகள் நிலை கொண்டிருந்த காலத்தில் இந்தியப் படைகளிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தைத் திலீபன் ஆரம்பித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன், ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல் பன்னிரண்டு நாள்கள் உண்ணா நோன்பு காத்து 26.09.1987மதியம் உயிர் துறந்தார்.

திலீபனின் 15 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று ஈழத்தமிழ்ப் பிரதேசம் எங்கும் அமைதியாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

*(சிறப்புக் கவிதைத் தொகுப்பு மற்றும் கட்டுரை 6 ஆம் பக்கத்தில்.)*

## திலீபன் நினைவுதினம் இன்று குடாநாடு எழுச்சிக்கோலம்!

### உண்ணாவிரதங்கள், பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.26

உண்ணாநோன்பிருந்து தன்னுயிரை விடுதலைப் போருக்கு ஆகுதியாக்கிய தியாக தீபம் லெப்கேணல் திலீபனின் 15 ஆவது நினைவுதின நிகழ்வுகள் குடாநாடெங்கும் இன்று உணர்வுபூர்வமாக எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

தீவுப்பகுதி உட்பட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

முக்கிய சந்திகள், அரச அலுவலகங்கள்,பொது நிறுவனங்கள் மற்றும் வீடுகளின் வாயில்களிலும் அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அவற்றுள் திலீபனின் உருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பல இடங்களில் எழுச்சிக் கீதங்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

நினைவு தினத்தை முன்னிட்டு வலிகாமத்தில் திலீபன் உண்ணாவிரதம் இருந்த நல்லூர் கந்தசுவாமி

(14ஆம் பக்கம் பார்க்க)

## 18,19ஆவது திருத்தங்களுக்கு எதிராக இதுவரை 27 மனுக்கள் தாக்கல்!

கொழும்பு,செப்.26

18ஆவது மற்றும் 19ஆவது அரசமைப்புத் திருத்தங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மொத்தம் 27 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நேற்று மட்டும் 14மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

எதிர்க்கட்சித் தரப்பில் உள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. போன்ற கட்சிகளே உயர் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றன.

உயர்நீதிமன்றத்தில் இத்தனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், அவற்றின் மீதான விசாரணைகளின்போது ஒவ்வொரு மனுவின் சார்பிலும் ஆஜராகும் ஆகக்குறைந்தது ஒரு சட்டத்தரணிக்காவது வாதிடுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டியிருக்கும்.

பல மனுக்கள் தாக்கலாகியுள்ளதால் மனுதாரர்கள் தரப்புச் சட்டத்தரணிகள் அனைவரினதும் வாதம் முடிவடைவதற்கே வாரக்கணக்கில் எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பான நீதிமன்ற விசாரணை

(14ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறைக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

கொழும்பு,செப்.26

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நீராகாரம் இன்றி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத் தயாராகிவருகின்றனர்.

சிறைச்சாலை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்சி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் என்பவற்றின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களும் மற்றும் அரசியல் கைதிகளும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

## திலீபனின் படகுப் பவனியை வழிமறித்த 'டோறா' படகு!

### நயினாதீவுக் கடலில் சம்பவம்

யாழ்ப்பாணம்,செப்.26

தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய அலங்கார படகுப் பவனி நேற்று தீவக கடற்பரப்பில் இடம் பெற்ற சமயம் கடற்படையின் 'டோறா' படகு ஒன்று அந்தப் படகுப் பவனியை வழிமறித்தது.

படகுப் பவனி நேற்றுப் பிற்பகல் எழுவைதீவு, அனலைதீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் - நயினாதீவை அண்டிய கடலில் வைத்து - கடற்படையின் 'டோறா' படகு குறுக்கே வந்து திலீபனின் படகை வழிமறித்ததாகக் கூறப்படுகிறது.

படகில் இருந்த பொதுமக்கள் கலவரமடைந்தனர்.

அலங்காரப் படகினை தங்கள் படகுடன் கொண்டு வந்து அணைக்குமாறு கடற்படையினர் உத்தரவிட்டனர் என்றும் -

பின்னர் படகினை குறிகாட்டுவான் நோக்கி திருப்புமாறு உத்தரவிடப்பட்டதாகவும் -

கூறப்படுகிறது.

படகு பின்னர் குறிகாட்டுவானுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அது தடுத்துவைக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் கடற்படையினருடன் வாக்குவாதப்பட்டனர்.

படகில் இருந்த பொதுமக்கள் கொந்தளித்ததைத் தொடர்ந்து படகு அங்கிருந்து மீண்டும் செல்ல அனு

(14ஆம் பக்கம் பார்க்க)

பெற்றோர்களே!

வடக்கு - கிழக்கில் போலியோ மறைந்திருக்கலாம்
என அஞ்சப்படுகின்றது!
உங்கள் குழந்தையை போலியோ பீடிக்காமல் இருக்க
எதிர்வரும் சனியன்று (28-09-2002) தவறாது
போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுங்கள்!

மறந்துவிடாதீர்கள்!!

Sow the Seeds of Love

PolioPlus

Rotary International

- யாழ்.றோட்டறிக் கழகம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# திலீபன் நினைவுதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.26

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 15ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறுகின்ற இன்று இடம்பெறும் முக்கிய நிகழ்வுகள் வருமாறு:-

### நாவாந்துறையில் உண்ணாநோன்பு

நேற்று நாவாந்துறைப் பகுதியில் உண்ணாநோன்பு அனுஷ்டிக்கப்பட்டது. நாவாந்துறை, கொட்டடி பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாவாந்துறை சந்தைப் பகுதியில் காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்த உண்ணாநோன்பில் அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

இதனையொட்டி அப்பகுதி எங்கும் மஞ்சள் - சிவப்பு நிறத்திலான கொடிகள் கட்டப்பட்டிருந்ததுடன் தியாக தீபம் திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு, மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டிருந்தன.

### வடமராட்சியில் ஊர்திப்பவனி

தியாகி திலீபனின் உருவப்படம் தாங்கிய அலங்கார ஊர்தி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வடமராட்சியின் பல்வேறு இடங்களுக்கும் சென்றது.

காலை 9 மணியளவில் நெல்லியடியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சிக் கோட்ட அரசியல் பணிமனையிலிருந்து ஆரம்பமான ஊர்திப்பவனி மந்திகை, கிராமக்கோடு, பருத்தித்துறை பஸ் நிலையம், தும்பளை, உபயகதிர்காமம் ஊடாகச் சென்று திரும்பவும் பணிமனையை வந்தடைந்தது.

மாலையில் ஊர்திப்பவனி இன்பருட்டி, சுப்பர்மடம், பொலிகண்டி, ஊறணி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, நவிண்டில் ஊடாக நெல்லியடியை வந்தடைந்தது.

### நெடுந்தீவில் இன்று நிகழ்வுகள்

தியாகி லெப் கேணல் திலீபனின் 15ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் இன்று காலை நெடுந்தீவு மத்தியில் உள்ள மாவீரர் நினைவுச்சுடர் மண்டபத்தின் அருகே இடம்பெறவுள்ளன.

குதிரைகள் அணிவகுப்பு மற்றும் பொதுமக்களின் அணிவகுப்பு என்பவற்றைத் தொடர்ந்து நெடுந்தீவு பாலத்துறையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

நெடுந்தீவு - பாலத்துறையில் திலீபன் ஞாபகார்த்த 'கலங்கரை விளக்கம்' திறந்துவைக்கப்படும். இக்கலங்கரை விளக்கம் திலீபன் ஞாபகார்த்தமாக 1988ஆம் ஆண்டளவில் கப்டன் இன்சூரின் ஏற்பாட்டில் அமைக்கப் பட்டிருந்தது. பின்னர் சேதமாக்கப்பட்ட இக்கலங்கரை விளக்கம் அப்பகுதி மக்களின உதவியுடன் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது.

### அல்வாயில் இன்று

அல்வாயில் இன்று தியாகி லெப். கேணல் திலீபனின் 15ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் அல்வாய், மாலு சந்திப் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளன.

இதில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர்கள் உட்பட பலர் நினைவுரையாற்றவுள்ளனர்.

(ஒ-எ-3-8-9-10-182)

# மயானத்தைப் பாவனைக்கு பெற்றுத்தரக் கோரிக்கை!

காரைநகர்,செப்.26

காரைநகர், நீலங்காடு நீலகிரி இந்து மயானத்தைப் பொதுமக்கள் பாவனைக்குப் பெற்றுத்தருமாறு கோரி, நீலங்காடு கிராம முன்னேற்றச் சங்கம் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

இப்பகுதியில் பொதுமக்கள் தற்போது மீளக்குடியமர்ந்து வருவதாகவும் -

இதனால் தமது உறவினர்களின் இறுதிக்கிரியைகளை மேற்கொள்ள 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மயானத்திற்கே செல்லவேண்டி உள்ளதாகவும் -

ஆகவே, கடற்படை வசம் உள்ள நீலகிரி மயானத்தைப் பொதுமக்கள் பாவனைக்குப் பெற்றுத்தருமாறும் -

இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜர் காரைநகர் தென்மேற்கு கிராம சேவையாளர் ஊடாக ஊர்காவற்றுறை பிரதேச செயலருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஒ-73)

## யாழ். மாநகரசபை பிரிவில்

# சொட்டு மருந்து வழங்கும் நிலையங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்.மாநகரசபைப் பிரிவில் நாளைமறுதினம் சனிக்கிழமையும், அடுத்த மாதம் 26ஆம் திகதியும் போலியோ சொட்டுமருந்து கொடுக்கப்படும் 22 நிலையங்கள் பற்றிய விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த நிலையங்களில் காலை 7.30 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரையும் சொட்டுமருந்து வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலையங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம் - கொழும்புத்துறை, சிறுவர் பூங்கா, சிறுவர் பாடசாலை - பாஷையூர், குருநகர் சனசமூக நிலையம், ஆவே மரியா பாலர் பாடசாலை, யூபிளி மகப்பேற்று நிலையம் (1), யூபிளி மகப்பேற்று நிலையம் (2), ஆயுள்வேதக் கல்லூரி - யாழ்ப்பாணம்.

போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம், குருநகர் சிகிச்சை நிலையம், கொட்டடி பாலர் பாடசாலை, நாவலர் வீதி சிகிச்சை நிலையம், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் - கண்டி வீதி, அரியாலை மகப்பேற்று நிலையம் - கலைமகள் வீதி, அன்கர் பாமசி - ரவி வீடு.

கந்தர்மடம் சிகிச்சை நிலையம், செட்டித்தெரு, நல்லூர் முருகன் சனசமூக நிலையம், நல்லூர் சிகிச்சை நிலையம், மூத்தவிநாயகர் சனசமூக நிலையம், வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம், ஞானக் குழந்தை பாலர் பாடசாலை - இராமநாதன் வீதி, ஞானக்குழந்தை பாலர் பாடசாலை - சிவப்பிரகாசம் வீதி.

முன்னர் சொட்டுமருந்து வழங்கிய, வழங்காத 5 வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் மேற்படி தினங்களில் தவறாது சொட்டு மருந்து வழங்க பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநகர சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

(எ)

## தெற்கிலிருந்து வந்து

# சிறுநீரகச் சிகிச்சைக்கென பணம் சேர்த்தோர் கைது!

யாழ்ப்பாணம்,செப்.26

சிறுநீரகச் சிகிச்சைக்கெனக் கூறிக்கொண்டு யாழ்நகரப் பகுதியில் பொதுமக்களிடம் பணம் சேகரித்த இருவர் பொலீஸாரால் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ்.பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தொலைபேசித் தகவலை அடுத்தே இவர்கள் இருவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தென் பகுதியைச் சேர்ந்தவர்களான குருத்தாலகே சுரேந்திரபாலா, படாசுவார்ஸ்கே ஜெயரத்ன ஆகிய இருவருமே இவ்வாறு மன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரையும் அடுத்த மாதம் 2ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்கும்படி யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார்.

(எ-10)

## திக்கம் வடிசாலையை ஒப்படைக்கக்கோரி

# கூட்டுறவு கொத்தணி தொழிலாளர் பருத்தித்துறையில் நேற்றுப் பேரணி!

வடமராட்சி,செப்.26

வடமராட்சி திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச் சபையிடம் இருந்து மீண்டும் வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் ஒப்படைக்குமாறு கோரி வடமராட்சியில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கொத்தணியின் அங்கத்துவ சங்கங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான அங்கத்தவர்கள், பணியாளர்கள், நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

மந்திகை, கண்ணகை அம்மன் கோயிலடியில் இருந்து நண்பகலுக்குப் பின்னர் ஆரம்பமான இப்பேரணியில் கலந்துகொண்டோர் பல்வேறு வாசகங்கள் கொண்ட சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி வழியாக இரண்டு மைல் தூரத்திலுள்ள பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை சென்றனர். அங்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசாமியிடம் கொத்தணியின் தலைவர் நா.குணராசா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விலாசமிடப்பட்ட மகஜரைக் கையளித்தார். மகஜர் கையளிக்கும் வைபவத்தில் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி, விளைபொருள் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக பனை உற்பத்திப்பொருள் விரிவுரையாளரும், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான வி.ஜி.தங்கவேல், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் அ.செபஸ்ரியன் ஆகியோரும் கலந்துகொண்டனர். பேரணியில் கலந்துகொண்டோர் பின்வரும் வாசகங்கள் கொண்ட சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

'ஏழைகளின் சொத்தில் குருமாருக்கு ஓட்டோவா?', 'தேர்தல் காலத்தில் கூறியவை அமைச்சுப் பதவியுடன் காற்றோடு போய்விட்டதா?', 'கூட்டுறவுச் சங்கத்தை அபகரிக்காதே!', 'இந்து கலாசார அமைச்சரே, ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே!', 'திக்கம் வடிசாலை எமது சொத்து, அதனை அபகரிக்கவிடமாட்டோம்!', 'எமது சொத்தைப் பங்கு போட விடமாட்டோம்!', 'தேர்தல் பிரசாரத்தின்போது சொன்னது என்ன? செய்தது என்ன?'

பேரணி முடிவில் பருத்தித்துறை மருதடி கந்தசுவாமி கோயில் முன்றிலில் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் சீ.வி.கே. சிவஞானம், வி.ஜி.தங்கவேல் உட்படப் பலர் உரையாற்றினர்.

(ஐ-173)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணி முதல் பாஷையூர் சென்.அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி சென். அன்ரனீஸ் வி.க. 'பி' அணி எதிர் பாரதி வி.க. அணி.

★ மாலை 5.15 மணி சென். றொக்ஸ் வி.க 'பி' அணி எதிர் சென். மைக்கல்ஸ். வி.க. அணி.

(எ)

## வடமராட்சியில் சுவரொட்டிகள்

வடமராட்சி,செப்.26

ஈ.பி.டி.பி. அமைப்பினரை வடமராட்சியிலிருந்து வெளியேறுமாறு கோரும் சுவரொட்டிகள் வடமராட்சிப் பகுதியில் பல இடங்களிலும் நேற்று ஒட்டப்பட்டிருந்தன.

'ஈ.பி.டி.பியினருக்கான அன்பான வேண்டுகோள்' என்ற தலைப்பில் இச்சுவரொட்டிகள் கையால் எழுதி ஒட்டப்பட்டுள்ளன. அந்தச் சுவரொட்டிகளில் மாணவர்கள், பொதுமக்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கறுப்பு, சிவப்பு மையினால் சுவரொட்டிகள் எழுதப்பட்டுள்ளன.

(ஐ-173)

## பெற்றோரை தேடும் சிறுவன்

யாழ்ப்பாணம்,செப்.26

சுமார் 8 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் தனது பெற்றோரை தேடுகின்றான்.

யாழ்ப்பாணம் தனது சொந்த இடம் என்று கூறும் அந்தச் சிறுவனுக்கு தனது பெற்றோரின் பெயர்களைக் கூறுவது சிரமமாக உள்ளது. ஆயினும், தனது பெயர் புலேந்திரராசா கிருபைதாசன் எனவும் தாயின் பெயர் விஜயா எனவும் தெரிவித்துள்ளான். தான் தரம் 3இல் கல்வி கற்பதாகவும் கூறுகிறான்.

நேற்றைய தினம் சண்டிலிப்பாயில் உள்ள தனது சித்தியின் வீட்டுக்குச் சென்ற வேளையில் அங்கு தன்னை அடித்துத் துரத்தியதால் அங்கிருந்து திரும்பி நடந்து வந்ததாகவும் சிறுவன் தெரிவித்துள்ளான்.

பிரஸ்தாப சிறுவன் சில இளைஞர்களால அழைத்துவரப்பட்டு யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

(ஐ-10)

# திறப்பு விழாவுக்குச் சென்ற புலி உறுப்பினர்கள் தடுக்கப்பட்டனர்

## பருத்தித்துறையில் நேற்று சம்பவம்

வடமராட்சி,செப்.26

நேற்றுக் காலை நடைபெற்ற பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டட திறப்பு விழாவில் கலந்துகொள்ளச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரமுகர்கள் இருவர் பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத்தெரு சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

பின்னர் படை உயரதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் விழாவில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை, முதலாம் குறுக்குத் தெருவில் - இராணுவப் பாதுகாப்பு வலயத்துக்குள் - பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க புதிய கட்டடத் திறப்பு விழா நேற்றுக் காலை 10 மணிக்கு நடைபெற்றது. இவ்விழாவில் கலந்துகொள்வதற்காக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களான தயா, பாரதி ஆகிய இருவரும் சென்றனர். இவ்விருவரையும் முதலாம் குறுக்குத்தெரு சோதனைச் சாவடியில் வைத்து உட்செல்ல படையினர் அனுமதிக்கவில்லை. இவ்விருவரும் அனுமதிக்காக சில மணி நேரம் காத்திருந்தனர். இச்சம்பவம் குறித்து விழாவில் கலந்துகொள்ள ஏற்கனவே சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அவர் பருத்தித்துறை கட்டளை அதிகாரி கேணல் தெல்காகொடவுடன் பேச்சு நடத்தினார். நிகழ்வுகளில் கலந்துகொள்வதானால் நிகழ்வுகள் நடப்பதற்கு 24 மணி நேரத்துக்குள் தமக்கு அறிவித்தால் அனுமதிப்பது சுலபமாக இருக்கும் என்று கேணல் தெல்காகொட சிவாஜிலிங்கம் எம்.பியிடம் தெரிவித்தார். அத்துடன், இரு புலி உறுப்பினர்களையும் அழைத்து சிவாஜிலிங்கம் எம்.பி. முன்னிலையில் சிநேகபூர்வமாக உரையாடினார்.

(ஐ-173)

# சமாதான முயற்சியைக் குழப்ப படையினர் முயலக்கூடாது!

## பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு,செப்.26

பாதுகாப்புப் படையினர் சமாதான முயற்சிகளைக் குழப்பமுனையக் கூடாது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அனுராதபுரத்தில் படையினர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வன்னியாவில் உள்ள படைமுகாம்கள் மற்றும் காவலரண்களைப் பார்வையிட்ட பின்னரே இந்தக் கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

'சமாதானம் தற்போது அனைவருக்குமே தேவையான ஒன்றாக உணரப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் சமாதானத்தினைக் குழப்பும் வகையிலான எந்தவொரு நடவடிக்கையிலும் படையினர் ஈடுபடக்கூடாது.

பாதுகாப்பு உட்பட எந்தவொரு துறையிலும் படையினருக்கு சிக்கல்கள் தோன்றும்போது அது குறித்து உடனடியாக எனக்கு அறியத்தரவும்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-12)

# தீவக ஆசிரியர்களுக்கான எழுத்தாக்கத் திறன்போட்டி

உலக ஆசிரியர் தினத்தையொட்டி தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை, தமிழ் வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து ஆசிரியர்களுக்கு நடத்தும் எழுத்தாக்கத் திறன்போட்டி தீவகக் கல்வி வலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையும் நடைபெறும்.

போட்டிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:-

நெடுந்தீவு மகா வித்தியாலயம்- நெடுந்தீவுக் கோட்டப் பாடசாலைகள் அனைத்தும். புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவுப் பிரதேசப் பாடசாலைகள் அனைத்தும். கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயம் - காரைநகர் பாடசாலைகள் அனைத்தும். வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் - வேலணை, நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவுப் பாடசாலைகள் அனைத்தும்.

(ஒ)



# பாகிஸ்தானின் கராச்சிநகரில் 6 கிறிஸ்தவர் சுட்டுக்கொலை!

இஸ்லாமாபாத்,செப்.26

பாகிஸ்தானின் கராச்சிநகரில் கிறிஸ்தவ தொண்டு நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த 6 பேர் அடையாளம் தெரியாதவர்களால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் இருவர் காயமடைந்தனர்.



கராச்சியில் கொல்லப்பட்ட கிறிஸ்தவர்களில் ஒருவரின் உடல் எடுத்துச் செல்லப்படுகிறது.

கராச்சியின் மத்தியபகுதியில் உள்ள 12 மாடிக்கட்டடத்தில் நேற்று இக்கோரச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. குடியிருப்புகளும், அலுவலகங்களும் உள்ள இந்தக் கட்டடத்தின் 3 ஆவது மாடியில் கடந்த 30 வருடங்களாக இயங்கி வந்த அமைதிக்கும் நீதிக்குமான நிறுவனம் என்ற கிறிஸ்தவ தொண்டு அமைப்பின் பணியாளர்களே கொல்லப்பட்டவர்களாவர். இறந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாவர்.

சாதாரண நீளக்காற்சட்டை மற்றும் சேர்ட் அணிந்து முகச்சவரம் செய்த சிலர் துப்பாக்கியுடன் மேற்படி தொண்டு நிறுவன அலுவலகத்துக்குள் நுழைந்ததாகவும் -

அங்கிருந்தவர்களைத் ஆயுத முனையில் மிரட்டி அவர்களது கைகளை இறுகக்கட்டி, வாய்களை பசை நாடாக்களால் ஒட்டியதாகவும் -

பின்னர் அவர்களது தலைகளில் சுட்டுக் கொன்றதாகவும் -

கராச்சிப் பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரிந்து பொலீஸார் சம்பவ இடத்துக்கு விரையும் முன்னரே கொலையாளிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

கராச்சி மாநகரசபை மற்றும் அங்குள்ள துணித் தொழிற்சாலைகளின் ஊழியர்களது நலன்களைப் பேணும் செயற்றிட்டங்களையும், மனித உரிமைக் குழுக்களுக்கான செயற்றிட்டங்களையும் மேற்படி தொண்டு நிறுவனம் மேற்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கொலைகளுக்குக் காரணமானவர்கள் குறித்த தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் நிலை கொண்டிருப்பதை எதிர்த்துவரும் தீவிரவாத அமைப்புகள் பாகிஸ்தானில் உள்ள மேற்குலக மற்றும் கிறிஸ்தவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தி வருவதாகவும் -

அத்தகைய தாக்குதல்களில் ஒன்றாகவே தற்போதைய சம்பவத்தைக் கருதுவதாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

(ஓ)

# ஆலயத்துக்குள் நுழைந்து சூடு; இந்தியாவில் 30 பேர் மரணம்!

புதுடில்லி,செப்.26

இந்தியாவின் குஜராத் மாநிலம் சண்டிகாரில் இந்து ஆலயம் ஒன்றுக்குள் புகுந்த தீவிரவாதிகள் கண்மூடித்தனமாகக் சுட்டத்தில் 30 பேர் கொல்லப்பட்டனர். அந்தத் தீவிரவாதிகளை நேற்று இந்திய இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

சண்டிகார் சுவாமி நாராயணன் கோவிலுக்குள் நேற்று முன்தினம் திடீரென்று 2 தீவிரவாதிகள் நுழைந்தனர் அப்போது ஆலயத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது.

அந்த மண்டபத்துக்குள் புகுந்த இரு தீவிரவாதிகளும் மறைத்து எடுத்துச் சென்ற துப்பாக்கிகளை எடுத்து கண்மூடித்தனமாகச் சுடத் தொடங்கினர். இதில் 13 ஆண்களும், 6 பெண்களும், 4 சிறுவரும் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் காயமடைந்த மேலும் 7 பேர் பின்னர் உயிரிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து தீவிரவாதிகள் ஆலயத்துக்குள் பதுங்கிக் கொண்டனர். இதனால் ஆலயத்தை இந்திய இராணுவத்தினர் முற்றுகையிட்டனர் இந்நிலையில் நேற்று அதிகாலை சுமார் 70 கொமாண்டோ படையினர் ஆலயத்துக்குள் நுழைந்தனர்.

இதனையடுத்து ஆலயத்துக்குள் கடும் துப்பாக்கிச் சமர் தொடங்கியது. இந்த மோதலில் தீவிரவாதிகள் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தியப் படைத்தரப்பில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் சிலர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தீவிரவாதத் தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி குற்றஞ் சாட்டியுள்ளார். அதேவேளை, இச்சம்பவத்தை பாகிஸ்தான் கண்டித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நூற்றுக்கணக்கானவர்களைப் பலிகொண்ட



சண்டிகர் ஆலயத்துக்குள் கொல்லப்பட்டவர்களில் சிலரது சடலங்கள்.

இந்து - முஸ்லிம் மதக்கலவரத்தால் அதிர்ந்து போயிருந்த குஜராத் மாநிலம் சமீபகாலமாகத்தான் சுமுக நிலைக்குத் திரும்பிக்கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் மீண்டும் அங்கு மதக்கலவரங்களை தூண்டிவிடக் கூடும் என்று அஞ்சப் படுகிறது. ஆகவே, இந்திய மத்திய அரசு அங்கு அமைதி நிலையைப் பேணுவதற்காக இராணுவத்தை அனுப்பியுள்ளது.

(ஓ)

# துளைப் பாதை மற்றும் கற்கதவு எகிப்திய பிரமிடில் கண்டுபிடிப்பு

கெய்ரோ,செப்.26

எதிப்தில் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட பிரமிடில், 2 ஆவது துளைப் பாதையையும் மற்றொரு கற்கதவையும் அகழ்வாராட்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மன்னர் கு`புவால் கட்டப்பட்ட பிரமிட் அது. 137 மீற்றர் உயரமுள்ள அந்த பிரமிட், 23 லட்சம் கற்பாளங்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டுள்ளது. அது 227 மீற்றர் அடித்தளத்தைக் கொண்டுள்ளது. கெய்ரோ நகருக்கு அருகே பாலைவனப் பகுதியில் அமைந்துள்ள 3 பிரமிடுகளில் இதுவே மிகப் பெரியது.

அகழ்வாராச்சியாளர்களுக்கு பெரும் புதிராக உள்ளது பிரமிடின் கட்டமைப்பாகும். எனவே, அதை ஆராய்வதற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட இயந்திர மனிதனைப் பயன்படுத்தி ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர். இது குறித்து பிரமிட் ஆய்வுத்திட்ட அதிகாரி ஜாகி ஹவாஸ் கூறியதாவது:-

"பிரமிடின் வடக்குப்பகுதி மற்றும் தெற்குப்பகுதியிலிருந்து துளைப்பாதைகள் செல்கின்றன. பிரமிடின் நடுவில் சுமார்5 மீற்றர் அகலம், 5அல்லது 6 மீற்றர் நீளமுள்ள அறையிலிருந்து அந்தத் துளைப்பாதைகள் தொடங்குகின்றன.

"தெற்குப் பகுதி துளைப்பாதை வழியே சென்ற ரோபாட், அங்கு ஒரு கற்கதவைக் கண்டுபிடித்தது. அக்கதவுகளுக்குப் பின்புறம் ஓர் அறை இருப்பதும் தெரியவந்தது.

"அதேபோல, வடக்குப் பகுதித் துளைப்பாதை வழியே ரோபாட் செலுத்தப்பட்டது. அங்கு மற்றொரு கற்கதவும் அதை அடுத்து ஓர் அறையும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தெற்குப் பகுதியில் மற்றொரு கற்கதவு இருப்பது இப்போது தெரியவந்துள்ளது.

"அத் துளைப்பாதைகளின் அகலம் 8 அங்குலந்தான். அவற்றை மிக நவீன கருவிகளைக் கொண்டுதான் இப்போது விஞ்ஞானிகளால் ஆராய முடிகிறது. ஆனால், 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இவ்வளவு நேர்த்தியான தொழில் நுட்பம் கொண்ட பிரமிடை எவ்வாறு கட்ட முடிந்தது என்பது தான் பெரும் வியப்பை ஏற்படுத்துகிறது.

"தெற்குப் பகுதி துளைப் பாதையானது 40 பாகை கோணத்தில் உயர்ந்து செல்கிறது. வடக்குத் துளைப் பாதையோ இக்கட்டான 4 திருப்பங்களுடன் அமைந்துள்ளது" என்றார் அவர்.

## அமெரிக்க - பாக். அமைச்சர்கள் சந்திப்பு

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின்பவலை பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் இனாமுல் ஹக் சந்தித்துப் பேசினார்.

வாஷிங்ரனில் இச்சந்திப்பு நடைபெற்றது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் பதற்றம், அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நட்புறவை வலுப்படுத்தும் வழிவகைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் விவாதிக்கப்பட்டது.

(ஓ)

# ரஷ்ய நங்கையிடமிருந்து உலகஅழகிப் பட்டம் பறிப்பு

லொஸ்ஏஞ்சல்ஸ்,செப்.26

காதலனை ரகசியத் திருமணம் செய்து கர்ப்பிணி ஆனதால் ரஷ்ய அழகியின் உலக அழகிப்பட்டம்



பறிக்கப்பட்டது. அழகுராணிப் போட்டியில் 2ஆவது இடத்தைப் பெற்றவருக்கு உலக அழகிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான உலக அழகுராணி (மிஸ் யுனிவர்ஸ்) பட்டத்தை வென்றவர் பெடரோவா. ரஷ்ய நாட்டைச் சேர்ந்த இந்த அழகி தனது அழகுராணிப் பட்டத்தை இழந்து உள்ளார்.

கடந்த மே மாதம் 73 பேரைத் தோற்கடித்துவிட்டு பட்டத்தைக் கைப்பற்றினார் இவர். ஒரு ஆண்டுக்கு இவர் அழகுராணியாக உலகை வலம்வரவேண்டும். ஆனால், 5 மாதத்திலேயே அவரது பட்டம் பறிபோய் விட்டது.

இதற்கான அறிவிப்பை உலக அழகிப் போட்டியை நடத்திய நிறுவனத்தினர் நேற்றுமுன்தினம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அறிவித்தனர்.

இதைத் தொடர்ந்து 2ஆவது இடத்தைப் பெற்ற பனாமா நாட்டு அழகி ஜஸ்டின் பசக் அழகுராணி பட்டத்துக்குரியவராக அறிவிக்கப்பட்டார். அழகுராணிக்குரிய கிரீடம், சலுகைகள், பரிசுகள் இவருக்கு அளிக்கப் படும்.

பட்டத்துடன் பரிசுகளையும், புகழையும் இழந்துள்ள பெடரோவா அழகுராணிக்குரிய பணியைச் சரிவரச் செய்யாததால் நீக்கப்பட்டு இருப்பதாகப் போட்டி அமைப்பாளர்கள் அறிவித்தனர். அழகிப் பட்டம் வென்ற அவர் பல்வேறு கலை விழாக்களில் பங்கேற்கவேண்டும். ஆனால், இவர் அதற்கு மறுத்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால், உண்மைக் காரணம் அதுவல்ல என்று கூறப்படுகிறது. பெடரோவா தனது காதலனை ரகசியத் திருமணம் செய்துகொண்டதாகவும் - அதன்மூலம் கர்ப்பம் அடைந்து இருப்பதாகவும் - கூறப்படுகிறது. இதனால் அவரிடம் இருந்து பட்டம் பறிக்கப்பட்டு இருப்பதாக அமெரிக்க பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

52ஆண்டு கால உலக அழகிப் போட்டி வரலாற்றில் ஒருவரிடம் இருந்து அழகிப் பட்டம் பறிக்கப்படுவது இதுவே முதன்முறை ஆகும்.

அழகிப் பட்டம் வென்றபோது பெடரோவா சட்டப்படிப்பை முடித்து இருந்தார். சிவில் சட்டம் தொடர்பாக ஆராய்ச்சி மேற்படிப்பு படித்து வந்தார். அழகிப் பட்டத்தினால் ஆண்டு முழுவதும் சம்பளம், நியூயோர்க்கில் சொந்த வீடு, உலகம் முழுவதும் இலவசமாக விமானத்தில் பறக்கும் வசதி, எய்ட்ஸ் ஆராய்ச்சிக்கு நிதி திரட்டும் உரிமை மற்றும் ஏராளமான சலுகைகளையும் அவர் பெற்று வந்தார். இவை அனைத்தையும் தனது செயல்களினால் அவர் இழந்து இருக்கிறார்.

(ஓ)

### அமெரிக்கத் தூதரகத்துக்கு

# 'கடிதக் குண்டு' அனுப்பியோருக்கு சிலிநாட்டில் பத்தாண்டுகள் சிறை!

சான்டியாகோ,செப்.26

சிலி நாட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கும், சான்டியாகோ நகர சட்டத்தரணிக்கும் கடித வெடி குண்டுகளை அனுப்பிய இருவருக்கு தலா பத்தாண்டுகள் சிறைவாசம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

லெனின் கார்டியா, ஹம்பர்டோ லோபஸ் காண்டியா என்ற இருவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டது.

சிலியில் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றியவர் லெனின் கார்டியா. சர்வாதிகாரி அஸ்டோ பினோசெட்டின் ஆட்சியை எதிர்த்த போராளிகளுடன் தொடர்பு வைத்திருந்தார். அவருடைய நண்பர்தான் காண்டியா.

இருவரும் ஒரே நாளில் இரு கடித வெடிகுண்டுகளை தபாலில் அனுப்பினர்.

அமோனியம் நைட்ரேட்டும் அதை வெடிக்க வைப்பதற்கான கருவியும் கடிதங்களில் இருந்தன. கடித உறையைக் கிழித்திருந்தால் அது வெடித்திருக்கும். அதன் கனத்தைப் பார்த்ததும் சந்தேகம் அடைந்த தபால் ஊழியர்கள் வெடி மருந்து நிபுணர்களை வரவழைத்தனர். அவர்கள் அக கடிதங்களில் உள்ள குண்டுகளை செயலிழக்க வைத்தனர். இரு கடிதங்களிலும், அமெரிக்காவை இழிவாகத திட்டி எழுதியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

(ஓ)

# பாகிஸ்தானிய வாலிபர் ஒருவரின் 75 வயது மனைவி மர்ம மரணம்!

இஸ்லாமாபாத்,செப்.26

பாகிஸ்தானில் உள்ள பெஷாவா நகரைச் சேர்ந்த 28 வயது இளைஞர் முகமது ஜாபர். இவருடன் இன்ரர்நெட் மூலம் தொடர்பு கொண்டதில் காதலியானவர் ஜூனியா பேட்ரிசியா கொலன்ஸ் பிரிட்டனைச் சேர்ந்த இவர் 75 வயதுப் பெண்.

கடந்த 17ஆம் திகதி பெஷாவர் சென்று, ஜாபரை திருமணம் செய்து கொண்டார். இந்த மாது திருமணம் நடந்த 5ஆவது நாளில் ஒரு வாடகைக் காரில் ஜூனியா பிணமாகக் கிடந்தார்.

பொலீஸார் வழக்குப் பதிவு செய்து ஜாபரிடமும் கார்ச் சாரதியிடமும் விசாரணை நடத்திய பொலீஸார் பிரேத பரிசோதனை அறிக்கை வந்தால்தான் மரணம் எப்படி ஏற்பட்டது என்பது தெரியும் என்று தெரிவித்தனர். (ஓ)

# மத நம்பிக்கைக்கு எதிராக தாய்லாந்து பிக்கு புரட்சி

பாங்கொக்,செப்.26

தாய்லாந்தில் உள்ள பௌத்த மடாலயங்களில் ஒரு விநோத வழக்கம் பல ஆண்டுகளாக் இருந்து வருகிறது.

உயிருள்ள சிறிய பறவை, மிருகங்கள், மீன், ஆமை ஆகியவற்றைக் கூண்டுகள், பைகளில் வைத்து விற்பார்கள். பக்தர்கள் அதை விலை கொடுத்து வாங்கி விடுவித்து விடுவார்கள். மீன்களைப் பக்கத்தில் உள்ள குளத்தில் விட்டுவிடுவார்கள். இதனால் தங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். பறவைகளை வாங்காதவர்களை சில வியாபாரிகள் அடித்து உதைக்கவும் செய்கிறார்கள்.

ஆகவே, இந்த வழக்கத்துக்கு முடிவுகட்ட ஒரு பௌத்த பிக்கு முடிவுசெய்தார். அவர் பெயர் பிபாத் வாரா போர்ன். மத்திய தாய்லாந்தில் உள்ள அயுத்தயா மாகாணத்தைச் சேர்ந்தவர்.

பறவைகளைக் கூண்டுக்குள் அடைத்து வைப்பதே பெரிய கொடுமை. அவைகளை விற்பதும், வாங்குவதும் பாவம். வியாபாரிகள் விற்ற பறவைகளை மீண்டும் மீண்டும் பிடித்து விற்கிறார்கள் என்று அவர் குற்றஞ்சாட்டினார். அதோடு மட்டுமல்ல, தனது மடத்தின்முன் பறவைகளை விற்பதைத் தடை செய்துவிட்டார். அதற்குப் பதிலாக மடத்துக் குளத்தில் உள்ள மீன்களுக்கு இரை போடும் வழக்கத்தை ஊக்குவித்து வருகிறார்.

(ஓ)

## சாயிசிந்தனை



### இராமாயணம்

இராமாயணத்தின் அடித்தளத்தில் குறிப்பிட்டத்தக்க ஆழமான கருப்பொருள் நீரோட்டமாக ஓடிக் கொண்டிருக்கிறது. தசரதர் என்பது பத்து அம்சங்களைக்கொண்ட ரதத்தில் செல்லுபவர் என்பதாகும். அதுவே 'மனிதன்' எனப்படுவான். இராமாயணத்தில் அவர் மூன்று மனைவியருடன், அதாவது முக்குணங்களுடன் காட்டப்பட்டுள்ளான். தசரதருக்கு நான்கு பிள்ளைகள். அதாவது நான்கு புருஷார்த்தங்கள் உண்டு. இராமன் அறத்தையும், லட்சுமணன் பொருளையும், பரதன் இன்பத்தையும், சத்துருக்கன் வீட்டுப்பேற்றையும் குறிப்பார். இவற்றில் நான்காவது கூறப்பட்டுள்ள வீட்டுப்பேற்றை, அதாவது மோட்சத்தை, நம் கண்முன் தெளிவாக நிறுத்திக் கொண்டே இந்த நான்கு குறிக்கோளையும் ஒழுங்கான முறையில் அடைய வேண்டும். லட்சுமணன் என்பது புத்தியையும், சீதை என்பது சத்தியத்தையும் குறிப்பன. ஹனுமான் என்பது மனம். அதை உரியமுறையில் அடக்கிப் பயிற்சியளித்தால் அது வீரத்தின் களஞ்சியமாகும். ஹனுமானுடைய எஜமானாகிய சுக்கிரீவன் 'பகுத்தறிவு' ஆகும். இவற்றின் உதவியுடன் இராமர் சத்தியத்தைத் தேடிக் காண்பதில் வெற்றி பெறுகிறார். இதுவே இக்காவியம் ஒவ்வொரு மனிதனுக்கும் எடுத்துச் சொல்லும் பாடமாகும்.

(ஆதாரம்: நாளாந்த நற்சிந்தனை 03)

## தவறவிட்ட பொருள்கள் பிரதேச செயலகத்தில்!

யாழ்ப்பாணம்,செப்.26

நல்லூர் உற்சவ காலத்தில் அடியார்களால் தவறவிடப்பட்ட சில பொருள்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் உள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் ஆதாரத்தைக் காட்டி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருள்களின் விவரம் வருமாறு:-

★ ஒரு தொகைப்பணத்துடன் பேர்ஸ், அடையாள அட்டையும் (தே.அ.அ. இல.495804151வி) - பரமேஸ்வரி இரத்தினசிங்கம், பிள்ளையார் கோயிலடி, களபூமி, காரைநகர்.

★ அடையாள அட்டையுடன ஒரு பேர்ஸ்(தே.அ.அ.இல.505940741வி, விசேட அ.அ.இல. 091024310)-இரத்தினேஸ்வரன் விஜயராணி கச்சாய் வீதி, கொடிகாமம்.

★ஆண்களுக்கான கைக்கடிகாரங்கள் - 02 (இரண்டு).

★பெண்களுக்கான கைக்கடிகாரங்கள் - 01 (ஒன்று).

(ஐ-3)


## நீங்கள் துடிப்புமிக்க ஒருவரா?

சர்வதேச கணக்கியல் நிறுவனமொன்று தனது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தினை முனைப்புடன் நடத்துவதற்கு சுயமாக இயங்கக்கூடிய, துடிப்புள்ள ஒருவரது சேவையை,

முகாமையாளர் தரத்தில் நாடுகின்றது. கொழும்பிலுள்ள தலைமையகத்துடன் தகவல் பரிமாறக்கூடியவராகவும் ICA / CIMA பட்டயம் அல்லது அதில் பகுதிச் சித்தியடைந்திருப்பதுடன் கணக்கியலிலும், கண்காய்விலும் மிகுந்த அனுபவம் வாய்ந்த ஒருவர் விரும்பத்தக்கவராவார். கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம் அல்லது அரச கணக்காளர் சேவையிலிருந்து அண்மையில் இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேலும் நிபுணத்துவ சேவைகளை வழங்கக்கூடிய வாய்ப்புக்களைத் தேர்ந்தெடுக்கக் கூடியவரும் யாழ்ப்பாண மாவட்டத்தின் வணிகச் செயல்களுடன் நன்கு பரிச்சயமானவரும் சிறப்புத் தேர்வுநராகக் கணிக்கப்படுவார்.

**கவர்ச்சியான வேதனப் பொதியைப் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.**

இவ்விளம்பரம் பிரசுரமானதிலிருந்து 10 தினங்களுக்குள் சிபார்சு வழங்கக்கூடிய உறவற்ற சிபார்சுக்காரர் இருவரின் முகவரியுடன், தனது பூரண விவரங்கள் அடங்கிய கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
த.பெ.எண் - 1800,
கொழும்பு.

(C/23957)


## விவசாயிகள் - விவசாயபீட மாணவர் இணைந்து அனுபவக் கற்றல் செயற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட இறுதியாண்டு மாணவர்கள், குடாநாட்டு விவசாயிகளுடன் இணைந்து செயற்படும் வகையிலான 'அனுபவக் கற்றல்' செயற்பாடு ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என்று யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி எஸ்.இராசதுரை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தகவல் தருகையில் அவர் மேலும் கூறியதாவது -

விவசாய மாணவர்கள் நேரடியாகக் களத்தில் இறங்கி, பலதரப்பட்ட விவசாயிகளையும் சந்திக்கிறார்கள். விவசாயம் தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகளை ஆராய்ந்து, ஆலோசனைகளை முன்வைக்கிறார்கள். இந்நடவடிக்கைகள் காரணமாக மாணவர்கள் மாத்திரமன்றி விவசாயிகளும் பெரும் நன்மையடைந்துள்ளார்கள். இதுவரை விவசாயபீட இறுதியாண்டு மாணவர்கள் 14பேர் தமது கள அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளார்கள் - என்று தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.மாவட்ட விவசாயிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் நல்லின விதைத் தேவைகள், 'சீக்கோ' எனப்படும் விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் பூர்த்திசெய்யப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-9)

## கூட்டுறவு இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.26

கிளிநொச்சி, முல்லைத்தீவு கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளில் கனிஷ்ட, சாதாரணதரப் பயிற்சி நெறிகளில் பயிற்சிபெற்று இறுதிப்பரீட்சைக்கு தோற்றாமல் யாழ்ப்பாணம் வந்துள்ள பயிற்சியாளர்கள் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாழ்ப்பாணத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவர்கள் உடனடியாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கூட்டுறவுப் பயிற்சி கனிஷ்ட, சாதாரணதரப் பயிற்சிகளுக்கான இறுதிப்பரீட்சை அடுத்த மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ-3)

## நெடுந்தீவில் இரு தினங்கள் மக்கள் வங்கி கருமபீடம்

நெடுந்தீவு மக்களுக்கு மக்கள் வங்கியின் சிறப்புத்திட்டங்களை அறிமுகம் செய்வதற்காக மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறை கிளையின் விசேட கருமபீடம் நாளையும் நாளை மறுதினமும் நெடுந்தீவில் இயங்கவிருக்கின்றது.

நாளையும் நாளை மறுதினமும் நெடுந்தீவு மகாவித்தியாலயம், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை, நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் ஆகியனவற்றில் விசேட கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சேமிப்பின் முக்கியத்துவம், மாணவர்களிடையேயான சேமிப்பு, மக்கள் வங்கியின் சேமிப்பு மற்றும் கடன் திட்டங்கள் ஆகியன தொடர்பாக இக்கருத்தரங்குகளில் விளக்கம் அளிக்கப்படும்.

புதிதாக வங்கிக் கணக்கு ஆரம்பித்தல், கடன் வசதிகளுக்கு ஆலோசனை வழங்கல் போன்ற பணிகளும் இந்தக் கருமபீடத்தில் இடம்பெறவிருக்கின்றன.

கருமபீடத்துக்கு பெரும் எண்ணிகையானவர் சமுகந்தரும் பட்சத்தில் மாதம் ஒரு தடவை அங்கு கருமபீடத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளர் ஜி.சற்குணபாலன் தெரிவித்தார். (ஐ-3)

## குடியிருப்பில் கடற்படை முகாம்

காரைநகர்,செப்.26

ஊர்காவற்றுறை ஊருண்டி கிராமத்தின் பத்து வீட்டுத் திட்டப் பகுதியில கடற்படையினர் முகாமிட்டிருப்பதால் அப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள கடற்படை முகாமை அகற்றி மக்களை மீளக்குடியமர அனுமதி பெற்றுத்தருமாறுகோரி கண்காணிப்புக் குழுவிற்கு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியினைச் சேர்ந்த 65 குடும்பங்கள் கையொப்பமிட்டு இந்த மகஜரை சமர்பித்துள்ளன. (ஐ-73)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**

**கந்தசாமி செல்வரூபன்**

**(ரூபன்)**

| மண்ணில் | திதி: | விண்ணில் |
|---|---|---|
| 20.03.1972 | 01.10.2002 | 26.09.2001 |

*கனவு கூடக் கண்டதில்லை*
*நனவாகும் உம் பிரிவென்று!*
*குடும்பத்தில் பொறுப்பாகி*
*மரணத்தில் நெருப்பாகி*
*ஆத்மாவின் ராகத்தில்*
*ஆற்றொணா சோகத்தில்!*
*அலைகடலின் மீதிருந்து!*
*ஆத்மசாந்திக்காய் வேண்டுகின்றோம்!*

எதிர்வரும் (01.10.2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சம்பந்தர் கடையடி,*
*கரவெட்டி மேற்கு.*

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(8594)




உதயன்

# திலீபன் ஒரு வழிகாட்டி!

ஈழ விடுதலைப் போர் என்ற வேள்வியில் தியாகி திலீபன் தன்னை ஆகுதியாக்கி இன்றுடன் பதினைந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

உலகில் உரிமைக்காக உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்த உத்தமர்களின் வரிசையில் உயர்ந்த இடம் திலீபனுக்கு உண்டு.

பகத்சிங்கின் தோழர் ஜதீந்திரநாத் தாஸ், ஆந்திராவின் பொட்டி சீராமுலு, விருதுநகர் சங்கரலிங்க நாடார், ஐரிஷ் விடுதலைப் போராளி பொபி சாண்ட்ஸ் வரிசையில் திலீபனும் ஒருவன்.

ஆனால், நீராகாரம்கூட உள்ளெடுக்காமல் உண்ணாநோன்பிருந்ததால் இவர்கள் அனைவரையும் விஞ்சி நிற்கின்றான் தியாகி திலீபன்.

சாத்வீகத்தால் சுதந்திரம் பெற்ற பாரதத்துக்கே சாத்வீகத்தைப் போதித்து, தலைகுனிய வைத்த பெருமை அவனுடையது.

காந்தி தேசத்துக்கே காந்தியத்தை மீளப் புகட்டிய தமிழ் மறவன் திலீபன்.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் வித்தியாசமானதொரு திருப்புமுனைக்கு சங்கொலித்த அவனது தியாகம், அந்த விடுதலைப் போராட்டத்தில் புதியதோர் அத்தியாயத்துக்கு அத்திவாரமிட்டது.

கழுத்தில் சயனைட் குப்பியைத் தொங்கவிட்டும், உடலில் தற்கொலைக் குண்டு தாங்கிய அங்கியை அணிந்தும், இனத்துக்காகக் கணத்தில் உயிர்துறக்கத் தயாரான ஓர்மத்தோடு விளங்கும் போராளிகள் மத்தியில் திலீபன் வித்தியாசமானவனாக இருந்தான்.

உணவின்றி, தாகத்துக்கு ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல் - ஒரு கணத்தில் மட்டுமன்றி - உயிர் பிரியும்வரை - 12 நாள்கள் வரையும் - கணந்தோறும் மரண அவஸ்தையை - மக்களுக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தாரைவார்க்கும் திருப்தி பெருமிதத்துடன்கூடிய புன்னகை முகத்தில் தவழ - சகித்துக்கொண்டவன் அவன்.

உண்ணாநோன்புப் போராட்டத்துக்குத் திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் ஐந்து.

அவற்றுள் முக்கியமானது தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக - முற்றாக - நிறுத்தப்படவேண்டும் என்பது.

ஈழத்தமிழர்கள் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க அவர்களுக்கு ஒரு தாயகம் தேவை. வரலாற்று ரீதியாக, பாரம்பரியமாக அவர்கள் வாழ்ந்துவரும் தாயகபூமி தனித்துவத்தோடு பேணப்படவேண்டும் என்பதே அவர்களது அவா.

அந்த ஆவலின் - அவாவின் - வெளிப்பாடே விடுதலைப் போர். தங்கள் தாகம் தமிழீழத் தாயகம் என்று ஈழப்போராளிகள் முழங்கியது இதைத்தான்.

இந்தத் தாயகப் பூமிக்காகத்தான் அன்று திலீபன் சாகும்வரை உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்தான்.

இன்று முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுக்கள், அமைதி முயற்சிகள் போன்றவற்றிலும் தமிழர் தாயகத்தைப் பேணும் தீர்வுகுறித்துத்தான் பிரஸ்தாபிக்கப்படுகின்றது; முன்னுரிமை தரப்படுகின்றது.

"எமது தாயகத்தில் - எமது முதாதையரின் சரித்திர ரீதியான வாழ்விடத்தில் - கணிசமான தன்னதிகாரத்துடன்கூடிய சுயாட்சி முறை ஒன்றை அரசு முன்வைக்குமானால் அதைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளத்தயார்" - என்று தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களில் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் கூறியவை இங்கு நினைவு கூரத்தக்கவை.

சமாதான முயற்சிகளில் - ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் - இன்றும், என்றும் முனைப்புற்றிருக்கும் விவகாரம் தமிழரின் தாயகம் பற்றிய விடயமே.

அதனைப் பேணவும், பாதுகாக்கவும் வலியுறுத்தியே அன்று திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்தான்.

தமிழர் தாயகத்துக்காக களத்தில் ஆயுத சமராடி உயிர்துறக்கத் தயாரான ஆயிரக்கணக்கான வேங்கைகள் மத்தியில், அஹிம்சை வழியில் அறப்போர் நடத்தி, தன்னைத் தானே பட்டினி போட்டு, தனது உடலை உருக்கி, உயிரைத் துறக்கத் தயாரான திலீபன் போன்றோர் முற்றிலும் மாறானவர்கள்.

உள்ளத்தால் உறுதிமிக்க இத்தகைய இளைஞர்களைக் கொண்ட இனம் தன் இலக்கை அடைவது நிச்சயம்.

ஆயுத வழியில் மட்டுமல்லாமல், அஹிம்சை வழியிலும் இலக்கை எட்டுவதில் உறுதிமிக்கவர்கள் நாங்கள் என்பதை உறுதியோடு உலகுக்கு நாம் எடுத்துக்காட்ட வேண்டியவேளை மீண்டும் தமிழருக்கு வந்துள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது.

அதற்கு திலீபனின் தியாகமும், உறுதியும் வழிகாட்டட்டும்.

## தியாகி திலீபனின் மரணம் ஒரு மாபெரும் வரலாற்றுச் சம்பவம்

- தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன்



## யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தபாலகங்களிலும் தபாற்பொதிகள் ஏற்கப்படும்

### பிரதி அஞ்சல் மாஅதிபதி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்களில் வெளியிடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான தபாற்பொதிகளை ஏற்றுக்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதி அஞ்சல் மாஅதிபதி என்.ஜெயரத்தினம் தெரிவித்துள்ளார்.

எனவே, பொதிகளை அனுப்பவிரும்பும் பொதுமக்கள் தமக்கு அருகில் உள்ள தபால் நிலையங்கள் ஊடாக அவற்றை அனுப்பிவைக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையை அடுத்து பொதிகளை ஏற்கும் பணி வடக்கு - கிழக்கில் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் 2000ஆம் ஆண்டு காலப் பகுதியில் பொதிகளை அனுப்பும் சேவையை மேற்கொள்ள அனுமதி கிடைத்தது. ஆயினும், தபாலதிபர்களின் தற்துணிவின் பேரிலேயே பொதிகள் ஏற்கப்பட்டு வந்ததால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அச்சேவை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அதாவது, பொதிகளை அனுப்புவோர் தபால் நிலையங்களுக்கு எடுத்துச்சென்று ஊழியர்கள் முன்னிலையிலேயே அவற்றைப் பொதிசெய்தனர். அதன் பின்னரே அவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. தபாலதிபர்கள் தமது தற்துணிவின் அடிப்படையில் அவற்றை ஏற்றுக்கொண்டனர்.

இந்த நடைமுறை சகல தபாலகங்கள் மற்றும் உப-தபாலகங்களுக்கும் பொருந்துவதாக இருந்தது.

தற்பொழுது நாட்டில் சுமுகநிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து எவ்வித கெடுபிடிகளும் இன்றிப் பொதிகளை ஏற்று வெளியிடங்களுக்கு அனுப்பும் பணியை மேற்கொள்ள பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## கடற்படையினரை வெளியேற்றி மீளக்குடியமர அனுமதியுங்கள்!

### ஊருண்டி கிராமமக்கள் கோரிக்கை

காரைநகர்,செப்.26

ஊர்காவற்றுறை ஊருண்டி கிராமத்தின் பத்து வீட்டுத்திட்டப் பகுதியில் முகாமிட்டுள்ள கடற்படையினரை வெளியேற்றுமாறும் -

அப்பகுதியில் பொதுமக்கள் மீளக்குடியமர அனுமதி பெற்றுத் தருமாறும் - இப்பகுதியைச் சேர்ந்த 60 குடும்பங்களின் பிரதிநிதிகள் கையொப்பமிட்டு யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு மகஜர் ஒன்றினை சமர்ப்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வேலணையில் உள்ள கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இந்த மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதி ஊர்காவற்றுறை பிரதேச செயலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊர்காவற்றுறை ஊருண்டி கிராமத்தின் மக்களாகிய நாம், 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து பிற இடங்களில் அகதிகளாக வசித்து வருகின்றோம். இதனால் கடந்த 12 வருடங்களுக்கு மேலாக பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம். ஆகவே, எமது சொந்த இடங்களில் தங்கியுள்ள இலங்கைக் கடற்படையினரை அங்கிருந்து வெளியேற்றி நாம் நமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம். (ஒ-73)

## பாடசாலை ஆசிரியர், ஆளணியின் சம்பளம் வழங்க புதிய நடைமுறை

வடமராட்சிகிழக்கு, செப்.26

ஆசிரியர்களினதும் பாடசாலைகளில் கடமைபுரியும் ஏனைய ஆளணியினதும் சம்பளங்கள் அவர்களது வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமான மனிதவள அபிவிருத்தி கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு விடுத்துள்ள சுற்றுநிருபம் சகல வலயக் கல்வித் திணைக்களங்களுக்கும், வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள கணக்காளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஆசிரியர்களுக்கும் ஏனைய ஆளணியினருக்கும் தனித்தனியே காசோலைமூலம் சம்பளப்பணம் வழங்கப்பட்டு வந்தது. தற்போதைய சுற்றுநிருபத்தின்படி ஆசிரியர்களின் கணக்குகள் உள்ள வங்கிகளின் முகாமையாளர்களது பெயரில் மொத்தப் பணமும் காசோலைமூலம் வழங்கப்படுமென்றும் -

ஆசிரியர்களின் பெயர்கள், வங்கிக் கணக்கு இலக்கங்கள், ஒவ்வொரு கணக்கிற்கும் செலுத்தப்பட வேண்டிய தொகை ஆகிய விவரங்கள் ஆகியவற்றை ஆசிரியர்களின் கணக்குகள் உள்ள வங்கிகளுக்கு அதிபர் அனுப்பிவைப்பார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இப்புதிய நடைமுறையால் பாடசாலை ஆளணியினரின் நடவடிக்கைகளும் வங்கி அலுவலர்களின் வேலைகளும் இலகுவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-182)

## இராணுவம் மற்றும் பொலீஸில் புலிகளை இணைக்கத் திட்டம்

கொழும்பு,செப்.26

நிரந்தர சமாதானம் உருவான பின் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை பொலீஸ் மற்றும் படைகளில் இணைத்துக் கொள்ளும் திட்டம் குறித்து பரிசீலித்து வருவதாக வெளிவிவகார அமைச்சின் உயர்மட்டத்தை மேற்கோள்காட்டி 'சண்டே லீடர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அமைப்பினர் படைத்துறையில் சிறந்த பயிற்சி பெற்றுள்ளவர்கள் என்பதாலும் -

அவர்கள் மிகுந்த ஒழுக்க சீலர்கள் என்பதாலும் - அவர்களைப் படைகளில் உள்வாங்குவதில் பிரச்சினை ஏதும் இருக்காது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-3)

### நாளை

புரட்டாதி 11
வெள்ளிக்கிழமை
(27.09.2002)
திதி : ஷஷ்டி
வைகறை 5.32 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
முழுவதும்.
கபில ஷஷ்டி
மரண யோகம்
சுபநேரம் : 6.02 - 7.32
ராகுகாலம் : 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

புதிய புகழ் வரவில்லையானால் பழைய புகழ் விரைவில் மறைந்துவிடும்.

## மரநிழலில் வகுப்புகள் நடக்கும்

## மருதங்கேணி பாடசாலைகளுக்கு மழைகாலத்தின்முன் கொட்டகை

### அமைத்துத் தரக் கோரிக்கை

வடமராட்சிகிழக்கு, செப்.26

மருதங்கேணிப் பிரதேசத்தில் மரநிழல்களின்கீழ் வகுப்புகளை நடத்திவரும் பாடசாலைகளுக்கு மழை காலத்திற்கு முன்னர் தற்காலிக கொட்டகைகளையாவது அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அண்மையில் மருதங்கேணிப் பிரதேசத்திற்கு அரச உயர் அதிகாரிகள் சென்றபோதே அப்பகுதி பொது ஸ்தாபனங்களாலும், பெற்றோர்களாலும் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, தாளையடி, றோ.க.த.க.பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை, மாமுனை அ.த.க பாடசாலை ஆகியவற்றுக்கே தற்காலிக கொட்டகைகளை அமைத்துத் தரும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மழைக்காலம் ஆரம்பித்தால் இப்பாடசாலைகள் செயற்பட முடியாதுபோக நேரிடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-182)

## எரிபொருள் நிலையங்களில் தண்ணீர் வசதி ஏற்படுத்துக!

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

அரியாலை,செப்.26

யாழ்குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் வாகனங்களின் 'ரேடியேற்றர்'களுக்கு பயன்படுத்தவென தண்ணீர் வசதியை ஏற்படுத்துமாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் கேட்டுள்ளது.

எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு எரிபொருள் நிரப்ப வரும் வாகனங்கள் ரேடியேற்றர்களுக்கு தண்ணீர் நிரப்ப வசதியின்றி சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்தே இவ்வாறு கேட்கப்பட்டது.

எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெரும்பாலானவற்றில் வாகனச் சில்லுகளுக்கு காற்று நிரப்பும் வசதியும் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. (ஒ-17)

## கல்வி, கணக்காய்வு சேவைகளின் போட்டிப் பரீட்சார்த்திகளுக்கு!

யாழ்ப்பாணம்,செப்.26

இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் 3ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி ஏற்கனவே திட்டமிட்டபடி வேம்படி மகளிர் கல்லூரியிலும், யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. முன்னதாக இப்பரீட்சை யாழ்.மத்திய கல்லூரியிலும் யாழ்.இந்துமகளிர் கல்லூரியிலும் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை -

வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 28ஆம், 29ஆம் மற்றும் ஒக்ரோபர் 5ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இலங்கைக் கணக்காய்வுச் சேவையின் வகுப்பு IIஇன் தரம் IIஇற்கு கணக்காய்வு அத்தியட்சகர்களைத் தெரிவுசெய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் யாழ்.மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது. முன்னர் இப்பரீட்சை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தகவல்களை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (ஒ-8)

# வடமராட்சி கிழக்கில் குடியமர்ந்த குடும்பங்களுக்கு கொடுப்பனவு தருக!

## புனரமைப்புக் குழு கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.26

வடமராட்சி கிழக்கில் மீளக்குடிய மர்ந்துள்ள 3 ஆயிரம் குடும்பங்களும அடிப்படை வசதிகள் ஏதும் அற்ற நிலையில் அல்லற்படுகின்றன. அவர்கள் குறை தீர நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவை உடன் வழங்க வேண்டும்.

- இப்படிக் கோருகின்றது. வடமராட்சி கிழக்குப் புனரமைப்புக் குழு.

வடமராட்சி கிழக்குப் பகுதியை புனரமைப்பது தொடர்பாக அண்மையில் கூட்டப்பட்ட கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

☆ மீளக் குடியமர்ந்த மக்களின் சுகாதார சேவையை வழங்கக் கூடிய வகையில் மருதங்கேணி வைத்திய சாலையை உடன் மீள ஆரம்பிக்க வேண்டும்.

☆ இந்தப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் நிரந்தரக் கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும். தளபாடங்களும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும்.

☆ பருத்தித்துறையில் தற்சமயம் இயங்கிவரும் மருதங்கேணிக் கல்விக்கோட்டம் மருதங்கேணியில் மீள இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ இப்பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் மக்களின் போக்குவரத்துக்கும் மிக இடையூறாக இருக்கும் சேதமடைந்த வீதிகளை உடன் சீரமைக்க வேண்டும்.

☆ பிரதேசத்தின் அபிவிருத்தியை முழுமையாகவும் விரைவாகவும் மேற்கொள்ள வசதியாக உதவி அரச அதிபர் அலுவலகத்தை பிரதேச செயலகமாகத் தரம் உயர்த்த வேண்டும்.

☆ வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு தனியான பிரதேசசபை அமைத்தல் வேண்டும்.

☆ மருதங்கேணி பொதுச் சந்தை மிகவும் அழிந்த நிலையில் உள்ளது. அச்சந்தையை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

☆ மீளக் குடியமர்ந்த மக்கள் வீடு கட்டவும் அடிப்படை சுகாதார வசதிகளைப் பெறவும் அவர்களுக்கு தலா 65 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க வேண்டும்.

☆ தபால் சேவை சீராக மேற்கொள்ள தனியான தபாலகம் அமைக்க வேண்டும்.

☆ விவசாயிகளுக்கு விதை நெல் உட்பட விவசாய உள்ளீடுகளை வழங்க வேண்டும். (ஐ-3)

## பாலசிங்கத்தின் கருத்துக்களில் சாதகமான பல அம்சங்கள்

### உண்டு என்கிறார் மாதுளுவாவே சோபித தேரர்

கொழும்பு,செப்.26

அரசு - விடுதலைப் புலிகள் இடையேயான சமாதானப் பேச்சின் முதற்கட்டம் முடிந்தபின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆலோசகர் அன்ரன பாலசிங்கம் தெரிவித்த கருத்துக்களில் சாதகமான பல அம்சங்களை அவதானிக்க முடிவதாக கோட்டை நாகவிகாராதிபதி மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்ததாக 'ராவய' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தமது ஈழக்கோரிக்கையிலிருந்து புலிகள் மாறியிருப்பது சமாதானப் பேச்சுக்களை எதிர்ப்பவர்களின் சந்தேகங்களைப் போக்கிவிடுமெனவும் -

சுமுகமான சூழலில் பேச்சு இடம் பெறுவதை வரவேற்பதாகவும் - அரசமைப்பில் புதிய திருத்தங்கள் மேற்கொண்டு மேலும் புதிய மாவட்டங்களை உருவாக்கவேண்டுமெனவும் - தேரர் தெரிவித்துள்ளார்.

'நீண்டகாலமாக பெரும் அளவிலான உயிர், உடைமை இழப்புக்களை ஏற்படுத்திய யுத்தத்தின்மூலம் எத்தரப்பினரும் இறுதி வெற்றியை அடைய முடியவில்லை என்பதைச் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் உணர்ந்துகொண்டுள்ளனர் எனக் குறிப்பிட்ட தேரர், இடைக்கால நிர்வாகம் பற்றி உறுதியான முடிவுகள் எடுக்கப்படாத நிலையில் அது பற்றிக் கருத்து வெளியிட இயலாதெனவும், மிக முக்கிய காலகட்டமான இவ்வேளையில் பற்பல கருத்துக்களைத் தெரிவிப்பது தவறாகுமெனவும் குறிப்பிட்டார். (ஒ)

## கள்ளநோட்டு புழக்கம் நாட்டில் அதிகரிப்பு

500 ரூபா கள்ளநோட்டுக்கள் நாடு பூராவிலும் புழக்கத்தில் உள்ளதாக 'திவயின' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றி அச்செய்தியில் தெரிவித்ததாவது:-

தமக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, கடந்த 21ஆம் திகதி வென்னப்புவ பொலீஸார் மேற்கொண்ட தேடுதலின்போது அலுடகம பகுதியைச் சேர்ந்த இரு முஸ்லீம் வியாபாரிகளிடமிருந்து 500 ரூபா கள்ள நோட்டுக்கள் 37ஐ கைப்பற்றியதுடன் அவ்விருவரையும் கைது செய்துள்ளனர்.

ஆயத்த ஆடைகள் விற்பனை செய்யும் வியாபாரிகளான அவ்விருவரும் தெரிவித்த தகவலையடுத்து கள்ளநோட்டுகளை அவர்களுக்கு விநியோகித்த மற்றொருவரையும் பொலீஸார் தேடி வருகின்றனர்.

பிரஸ்தாப நபர் ஏற்கனவே 10 ரூபா கள்ள நோட்டுக்களுடன் கைது செய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இக்கள்ள நோட்டுக்களை அச்சிடும் இடத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர். (ஒ)

## எனது அதிகாரத்தைக் குறைக்க எவரும் ஆதரவளிக்கமாட்டார்கள்

### இப்படிக் கூறுகிறார் ஜனாதிபதி


கொழும்பு,செப்.26

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை வெட்டும் 19ஆவது அரசமைப்புத் திருத்த சட்ட நகலுக்கு தமது கட்சியைச் சேர்ந்த எவரும் ஆதரவு வழங்கமாட்டார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நம்பிக்கை வெளியிட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்ட நகலுக்கு ஆதரவு வழங்குவார்கள் என்று அரசுத் தரப்பில் இருந்து வெளிவரும் தகவல் குறித்தே அவர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

'பிரதமரின் சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும இந்தச் சட்டமூலத்துக்கு அவர்கள் எக்காரணம் கொண்டும் ஆதரவு வழங்கமாட்டார்கள்.

'எனது கட்சியைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்கப்போவதாகத் தெரிவித்தனர். அவர்களுடன் கலந்துரையாடியதன் பயனாக அவர்கள் அந்த முடிவை மாற்றிக்கொண்டனர். அந்தச் சட்டமூலத்தை ஆதரிக்கப் போவதில்லை என்று அவர்கள் உறுதிமொழி அளித்துள்ளனர்' - இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். (ஒ-3)



தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவு ஊர்தி தீவகம் சென்றபோது அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் பாப்பா உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

## மலையகத்துக்கு இடைக்கால நிர்வாகம் தரக் கோரிக்கை

கொழும்பு,செப்.26

சுமார் இரு நூற்றாண்டுகளாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய இந்திய வம்சாவளி தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் நலன்கள் பேணப்பட மலைநாட்டை உள்ளடக்கிய பகுதியில் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவேண்டும் என்ற வேண்டுகோளை ஐக்கிய ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோளை பிரதமர், ஜனாதிபதி மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள அந்த அமைப்பு, தமிழ்த் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாக ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசும் நியாயமான தீர்வை வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ளது. (ஒ)

## பத்திரிகையாளர் சங்கத்துக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,செப்.26

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்துக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.


யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் சிபாரிசின் பேரிலேயே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## ஆசிரியர் தின போட்டி

தென்மராட்சி,செப்.26

உலக ஆசிரியர் தினத்தையொட்டி தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடத்தப்படும் எழுத்தாக்கல் திறன்போட்டி தென்மராட்சி வலய பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 29ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## தியாகத் திருவுருவே.....



## திலீபா! நின் வேள்வியின்று வென்றதையா!

மானமுடன் வாழ்ந்தமிழ் மரபுகாக்க
மரபுவழி வந்தவெங்கள் மண்ணைக்காக்க
தேனமுதத் தமிழ் மொழியுரிமை காக்க
தித்திக்கு மிளமையினைத் தியாகம் செய்து
சேனையுடை னடிபதித்த பாரதத்தின்
செருக்கடக்க நிபந்தனைகள் விதித்துவிட்டு
கானமழை பொழியுமந்த வேலவனின்
காலடியில் தவமிருந்த திலீபாவாழி!

சீறுபுயல் வேகமதில் சுழன்றடித்து
செந்தமிழர்க் கரசியலி னறிவுரைத்து
ஆறுதற்குங் காலமிலா தலைந்துலைந்து
அடிமைத்தனை யறுக்குமுயர் தலைவனுக்கு
வீறுடைய தளபதியாய் ஆட்திரட்டி
விறுவிறுப்பாய் படையணியை வளர்த்தவன் நீ
பேறுடையும் நாமிருக்க நீயுருக்கி
மூட்டியதீ வெற்றி நடை போடுதையா!

ஆறாத துயர்சுமந்து நீயொடுங்கி
அணுவணுவாய் வேதனையா லுருக்குலைந்து
தேறாத நிலையெடுத்தாய் திகைக்க வைத்தாய்
பெற்றவனு மருகிருந்து கரையவைத்தாய்
மாறாத துயரமெலாம் நாம்சுமக்க
வருங்காலச் சந்ததிக்காய் நீயெழுந்தாய்
நீறாக வெதிரிபடை தகர்க்கின்ற
புலிவீரர் தமிழீழம் படைக்கின்றாரே!

உலகமெலா மோடியோடிப் படைக்கலங்கள்
திரட்டுகின்ற சிங்களத்துப் படையைவெல்ல
பலம்மிகுந்த மதிநுயர் தலைவனவன்
பலகோடி நிதிசேர்த்துப் படையெடுக்க
தலைசிறந்த வேங்கைகளைப் பெருக்குகின்றான்
தாக்கவரும் சிங்கங்கள் வீழ்ந்தழிய
தலைமுறையி னாட்சியிங்கு நடத்துகின்றான்
திலீபாநின் வேள்வியின்று வென்றதையா!

- மாரீசன்.

## ஒப்பற்ற தியாகத்தின் தீர்க்கத்தில்...



உலகினை வென்றிட்ட தியாகத்தின் தீர்க்கத்தில் திசைகளெல்லாம் மூர்ச்சித்துப்போனது. சோகச் சிலுவையைச் சுமந்து சுமந்து சோர்ந்து போயிருந்த எம்தேசத்து மக்களின் மனத்தில் சுதந்திர தாகம் உருப்பெற்று வலுப்பெற்றது. எங்கள் தேசமும் தேசியமும் பல்லாயிரம் சுதந்திரச் சிற்பிகளினைச் சுவாசித்துக் கொண்டது. தியாகிகளின் வரிசைப்படுத்தலில் தாற்பரியமே தேசத்தின் வரலாறானது.

அந்த வரலாற்றின் வரிசைப்படுத்தலில் தனித்துவமானதொரு பரிமாணத்தை தியாக திலீபனின் அஹிம்சைப் போராட்டம் ஏற்படுத்தியுள்ளது. காலங்களின் நகர்வின் மாற்றத்திலும், அவரின் சிந்தனைகள், கனவுகள், ஆன்மாவின் இலட்சியங்கள் அனைத்தும் மாற்றமுறாது இன்றும் நீண்டு விரிகின்றது. தியாகம் என்பது புனிதமானதொரு கருவூலம். எங்கள் தேசத்தின் சுவர்களில் எத்தனையோ வீரத்தியாகிகளின் தியாக வரலாற்றின் வீரத் தரிசனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அஹிம்சை வழியில் ஆவியை ஆகுதியாக்கிய தியாகச் செம்மலின் தீர்க்கங்கள் தனித்துவமானவை. 26.09.87இல் முடிவுற்ற அந்த ஒப்பற்ற தியாகியின் யாத்திரையின் எதிரொலிப்புகளும், தொடர்புகளும் இன்றும் தேசத்தின் வீதிகளில் அணிவகுக்கின்றன.

கோட்டையில் படபொழிவீசிய புலிக்கொடியும் தாயகத்தில் இடம்பெற்ற சமாதானச் செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களுடனும் பொங்கு தமிழாகப் பிரவகித்த மக்கள் புரட்சியும் சுதந்திர தமிழினத்தின் மனவலிமையின் பலத்தினையே உரைத்து நிற்கின்றன. அஹிம்சையின் தனித்துவத்தை ஒரு சுதந்திர தேசத்தின் தேவையை - சுயநிர்ணய உரிமையின் அவசியத்தை அகிலமெங்கினும் அறியச் செய்த வரலாற்றுப் பிரகடனம் இந்தத் தியாகியின் தீரத்திற்கே உரியது. அன்று ஆகுதியான திலீபனின் உள்ளத் திண்மைகள் காற்றுவெளியில் கலந்து ஊற்றாகி உயிர் வாழ்கிறது. அந்தத் தியாகியின் ஆன்மாவின் துடிப்புகள் ஓய்ந்து பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்ட பொழுதிலும் அவரின் உணர்வு சுமந்த உயிரின் உள்ளார்ந்த ஒளி இந்த தேசத்தின் திசைகள் அனைத்திலும் சுவாசிக்கிறது. எங்கள் தேச விடுதலையும் மெல்லமெல்ல அடி பதிக்கின்ற இந்தக் கணத்தில் அந்த தீரனின் ஆன்மாவின் கனவுகள் சிலிர்த்துக்கொள்கிறது.

- ப.அமுதினி

# பார்த்தீபனுக்கோர் நினைவு மடல்....

## என்றும் சுடர் ஒளியாய்!

எழுவான் கரை சிவந்தது - எங்களது
திலீபத் தீபமே எரிந்தது!
அழுதழுது விழிகள் இமைகிழிந்தன - அகிலமே
அண்ணனின் அஹிம்சையால் உறைந்தது!
மதுரத் தமிழ் பொலிவிழந்தது - அது
மன்னவன் நாவோடு வறண்டது!
தீதுடையோர் நெஞ்சங்களைக் கிழித்தது - தமிழ்த்
தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பியது!
ஆண்டுகள் பதினைந்து கடந்தது - இன்னும்
ஆறவில்லை திலீபன் நினைவுகள்
அணையாத தியாக தீபமாய் - என்றும்
எம்நெஞ்சில் சுடர் ஒளியாய் இருப்பான்!

எம்.சுயர்சன்
*கோண்டாவில்.*

## திலீபன் ஒரு பௌர்ணமி!

*புலியும் புயலும் அழுதன*
*பூகம்பம் பூமியில் வெடித்தது*
*விழியும் விழியும் சிவந்தன*
*வேங்கையின் உறுமல்கள் தொடர்ந்தன*

*ஒப்பந்தம் மீறிய பாரதம்*
*ஓர்பந்தம் அழிந்ததும் திகைத்தது*
*காந்தியை வணங்கிடும் தேசம்*
*காந்தியப் போரினை உதைத்தது!*

*நீரின்றி உணவின்றி திலீபன்*
*நீதியை விதைத்து திலீபமானான்*
*ஊருக்குள் விளைந்த இரத்தங்கள்*
*உரிமைச் சமர் தமிழீழமானது*

*போரும் சமாதானமும் தோற்பதில்லை*
*பொய்கள் தமிழினம் ஏற்பதில்லை*
*ஏறும் வாளும் வீழ்வதில்லை*
*ஏமாறும் வாழ்வு எமக்கில்லை!*

- வித்யாசன்.

## புரட்சி வெடிக்கட்டும்!

உண்ணாவிரதமிருந்த உத்தமனே திலீபா!
உன்நாமமெந்நாளும் உலகில் நிலைத்திடுமே!
மண்ணாளரசும் உன் மகிமையையுணராமல்
மாண்டிடவே விட்ட மாண்புதனை என்னென்போம்!
எண்ணாத நாளில்லை எத்தனையோ காலமாக
'புரட்சி வெடிக்கட்டும்' என்ற உன் வார்த்தைதனை
கண்ணாக மனதில் கருத்துடனே கலந்திட்ட
இந்நாளிலுன்னை நாம் இதயத்தில் எண்ணுகிறோம்!

கவிமணி இராசையா ஸ்ரீதரன்.

## ஈழத்து தியாகியானான்

மக்கள் புரட்சி வெடிக்கட்டுமென்று
மாபெரும் வேள்வி தொடங்கினன்
திக்கெல்லாம் தொழுது அழுதிட
தேசத்திற்காய் ஆகுதியாயினன்
பன்னிரெண்டு நாள்களும் நல்லூரில்
பசிமறந்து உரிமைக்காய் நோற்றனன்
எண்ணரிய தியாகத்தினால் உலகில்
'ஈழத்து தியாகி'யென இடம் பிடித்தனன்.

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.




## கனவுகள் யாவும் நனவாகுமே!

பாரிலே தமிழினம் பட்டதுயர்கண்டு – உந்தன்
பாசத்தை தேசத்தில் நிலையாக்கி
வீரமே விளையாக வெந்தனல் விழிகொண்டு
வேங்கையாக மண்ணில் மலர்ந்த திலீபா!
தேச மெல்லாம் பொங்குதடா தமிழாக – எம்
தேசத்தில் தோன்றிய எங்கள் தலைவனை
நேசமுடன் பற்றுதே தமிழினம் – உந்தன்
நினைவு நாளாய் உன் கனவுகள் நனவாகுமே!

என்.பிறேமசீலன்.

# தியாகச் செம்மல் திலீபன்!



**1987**ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி 10.48 மணியளவில் உலகத் தமிழர்களது மனங்கள் சோக மயமானது. இந்த வையகம் அழுதது; வானம் அதிர்ந்தது; நல்லூரான் கோயில் மணியும் தனது ஓசையை நிறுத்தியது. தமிழ்மக்களது கண்களில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. 265 மணித்தியாலங்கள் சாகும்வரையிலான தனது உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்த அந்தத் தியாகத் திலீபன் எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து விட்டார்.

திலீபன் என்ற ஓர் இலட்சிய நெருப்பு பாரதத்துடன் தர்மயுத்தம் புரிந்தது. அஹிம்சையைக் கற்றுக் கொடுத்த தேசத்திடமே 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து ஒரு துளி நீர்கூட அருந்தாமல் உண்ணா நோம்பிருந்தான். தமிழீழம் எங்குமே அஹிம்சைப்போர் தீப்பிளம்பாக கொழுந்துவிட்டு எரிந்தது. தமிழ் மக்களது கண்முன்னே நல்லூர் வீதியில் அந்த மனிதத் தெய்வம் தன்னை மெழுகாக உருக்கிக் கொண்டிருந்தது. 12 நாள்கள் வரை நகர்ந்த சகப் பயணத்தில் தமிழ்மக்கள் திலீபனைச் சூழ இருந்து இமைகொட்டாது திலீபனையே பார்த்தபடி இருந்தனர். நாளாக நாளாக மக்களது எதிர்பார்ப்பு ஏமாற்றமானது. திலீபன் வைத்த 5 அம்சக் கோரிக்கையை இந்திய அரசு நிறைவேற்றுமா? இதுதான் ஏமாற்றத்துக்குரிய காரணம்.

எங்கள் செல்வமே எங்களுக்காக வேனும் ஒரு சொட்டு நீரையாவது அருந்தமாட்டாயா? என தமிழத் தாய்மார்கள் திலீபனை வேண்டினார்கள். ஆனால், பருகுவதற்கு நீரைக் கொடுக்கவில்லை ஏன்?

"அன்பான தமிழீழ மக்களே நீர் உணவு அருந்தும்படி நீங்கள் கேட்பது என்னை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது. நான் இந்த மேடையிலே நீராகாரம் எதுவும் எடுக்காமல் தான் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தேன்.

'இறுதிவரை இந்த இலட்சியத்தில் இருந்து மாறமாட்டேன். நீங்கள் இந்தத் திலீபனை நேசிப்பது உண்மையாக இருந்தால் தயவுசெய்து இனி மேல் என்னை யாரும் நீராகாரம் அருந்தும்படி வற்புறுத்தவேண்டாம். உங்கள் திலீபனுக்கு நிறைந்த மனவுறுதிப்பாடும் தன்னம்பிக்கையும் உண்டு. என் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றாவிட்டால் நீரே எடுக்காமல் இறப்பேனேதவிர இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக என் இலட்சியத்தில் இருந்து ஒருபோதும் பின்வாங்கமாட்டேன்" என்று மேடையில் இருந்தபடி மக்களிடம் திலீபன் அன்பாக வேண்டினான்.

திலீபனை - அவனது போராட்டத்தை - இந்த மண் மதித்தது; மக்கள் அவனை நேசித்தார்கள். மாறாக திலீபனைக் காப்பாற்றும்படி அந்த நல்லூரானையே மனமுருகி தோத்திரம் பாடி வேண்டினார்கள்; வேதனைக் கடலில் மூழ்கினார்கள். யாருக்காக? திலீபனுக்காக. அப்படி இருக்க அந்தக் கண்ணீரை, ஏக்கத்தை யாருமே புரிந்துகொள்ளவில்லையே... திலீபன் அஹிம்சையில் மட்டுமல்ல துப்பாக்கி ஏந்திப் போராடுவதிலும் வல்லவன். 1986ஆம் ஆண்டின் இறுதியில் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற புலிகள் - இராணுவ மோதலின்போது பல இராணுவத்தினரைச் சுட்டுத் தள்ளினான். ஆனால், அந்த வேளையில் தான் எதிரியின் துப்பாக்கி ரவை ஒன்று அவனின் குடலைச் சிதைத்து விட்டது. அதனால் அவனின் குடலில் இருந்து 14 அங் குல நீளத்துண்டை இழக்கவேண்டி ஏற்பட்டது. இப்படி எத்தனையோ துன்பங்களைத் தமிழினத்துக்காக அனுபவித்தவர்தான் திலீபன்.

திலீபனது அஹிம்சைப் போரின் செய்தி உலக நாடெங்கும் பரவியது. பல நாடுகளின் பத்திரிகைச் செய்திகளில் திலீபனது உண்ணாவிரதப் போராட்டமே தலைப்புச் செய்தியானது. வேற்று நாடுகள் திலீபனின் நலம் விசாரித்து இந்தியாவையே திரும்பிப் பார்த்தது. இந்தியாவின் தமிழ்நாட்டில் மக்களிடையே உணர்ச்சிக் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஓரிரு தடவைகள் இந்தியாவில் இருந்து அரசியல் வலுவில்லாத தூதுவர்கள் யாழ்ப்பாணம் வந்து உறுதியற்ற வாக்குறுதி வழங்கினர். திலீபன் ஏங்கமறுத்தான். அவன் தீர்க்கமான - உறுதியான - நிலையான - காத்திரமான முடிவையே எதிர்பார்த்தான்.

நாள்கள் மெல்ல மெல்ல இரங்காமல் நகர்ந்தன. மக்கள் திலீபனது உடல் நலத்தில் நம்பிக்கை இழந்தனர். 12ஆம் நாள் திலீபன் என்ற தியாக தீபம் அணைந்துவிட்டது! அது காந்தியத்தைத் தோற்கடித்தது! ☆

- எம்.சுதேசிகன்

## திலீபனைத் துதிப்போம்!

ஈழத் தமிழ் மக்களின் விடுதலை வேள்வியில் ஆகுதியானவர்கள் நூற்றுக்கணக்கானோர். அவர்களில் தியாகி திலீபனுக்கு சிறப்பான இடமுண்டு. ஏனைய போராளிகள் களத்தில் வீரமரணம் அடைந்தார்கள். திலீபனோ அஹிம்சை அறநெறியில் போர் நடத்தி, தன்னைத் தானே பட்டினி போட்டு, உடலை உருக்கி உயிர் ஈந்தவன்.

தமிழ் மக்களின் விடுதலை உணர்வை உலகுக்கு வெளிப்படுத்தவும், இந்தியாவின் முகமூடியைக் கிழிக்கவும் திலீபனின் தியாகம் பெரிதும் உதவியது. அஹிம்சையின் நிலைக்களன் என்று புகழப்பட்ட இந்தியாவின் சுயரூபத்தை, அதன் வல்லாதிக்க எண்ணத்தை தியாகி திலீபனின் மரணம் எடுத்துக்காட்டியது.

தியாகி திலீபன் உயிர்நீத்து ஆறு வருடங்களாகிவிட்டன. அப்போதிருந்த நிலையைவிட தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இன்று பெயரளவில் வளர்ந்துவிட்டது. புதிய பரிமாணம் பெற்றுவிட்டது. இன்றைய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் திலீபன் நட்ட வரலாற்றுக் கல்லும் ஒரு காரணமாகும். திலீபனின் உண்ணாவிரதத்துக்குப் பதில் கூறி அதனை நிறுத்த முடியாத போது இந்தியாவின் இயலாமை முதலில் வெளித்தெரிந்தது. அந்த ஆரம்பம்தான் நினைத்ததைச் சாதிக்க முடியாமல் அவமானத்துடன் அது திரும்பிச் சென்றபோது இந்தியாவின் இயலாமை முழுமையாகத் தெரிந்தது.

தியாகி திலீபன் போன்றவர்களின் தியாகத்தினாலும், வீரத்தினாலும், மன உறுதியினாலுமே தமிழர்களின் விடுதலைப் போராட்டம் வேகமான வளர்ச்சி கண்டிருக்கிறது. அந்த வளர்ச்சி எவ்வித பின்னடைவும் இன்றி இன்னும் அதிவிசையுடன் இலட்சிய இலக்கை நோக்கி விரையும் என்பதனை கடந்த பதினொரு நாள்களாகத் தமிழீழ மக்கள் உணர்த்தியுள்ளனர்.

திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதில் மக்கள் காட்டிய எழுச்சியும், உணர்வலையும் அவர்கள் தமது விடுதலையை அடைவதற்காகப் போராடுவதில் முன்னரை விடத் தீவிரமாகி உள்ளனர் என்பதை எடுத்தியம்புகிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் இராணுவ வழியை நாடினும், தமிழ் மக்களின் விடுதலை வேட்கையையும் மன உறுதியையும் குலைத்துவிட முடியாது என்பதற்கு கடந்த 11 நாள் நிகழ்வுகளும் சான்றுகள்.

திலீபனின் தியாகம் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் உந்துசக்தியாக மாறி இருப்பதைக் காண்கிறோம். இது அவனது தியாகப் பயிரினால் கிடைத்த நல்ல விளைவு.

இந்தியாவுக்கு எதிரான அஹிம்சைப் போராட்டத்தில் அவன் வென்றான். அதன் மூலம் அவன் சாகாமல் என்றும் தமிழர் நெஞ்சங்களில் வாழ்கின்றான்; சுதந்திர இலட்சியத்தை நாளாந்தம் வளர்த்துக்கொண்டே இருக்கிறான்.

தியாகம் என்பது இலகுவான செயலல்ல. தனது உயிரைத் தியாகம் செய்யும் மனப்பக்குவம் எல்லோருக்கும் வராது. ஒரு வகையில் ஆன்ம உறுதி கொண்டவர்களாலேயே அது இயலும். ஆகையால், தியாகி திலீபனும் மற்றும் தியாகிகளும் மக்கள் சேவைக்கெனப் பிறந்த ஆத்ம சீலர்களாக மதிக்கப்பட வேண்டியவர்கள், என்றென்றும் போற்றித் துதிக்கப்பட்டவேண்டியவர்கள்.

*(26.09.1993 உதயன் ஆசிரியர் தலையங்கம்)*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மல்லாகம் சந்திக்கும் கே.கே.எஸ். வீதிக்கும் மிக அண்மையாக சோடாக் கொம்பனி ஒழுங்கையில் 51/2 பரப்புக் காணியில் ஆறு அறைகளும், தனிக் கிணறும் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.சிவநேசன், கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.(8641)

கொடிகாமம், பருத்தித்துறை வீதியில் (18பரப்பு) பயன்தரும் மரங்களுடன் சகல வசதிகளும் கொண்ட கல்வீடும் காணியும் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. தொடர்பு: 70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (8674)

பிறீமா, பகிரா இன புறொயிலர் குஞ்சுகள், சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 27.09.2002 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும் தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P No. 3529, 2867. (8655)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் ஞானவைரவர்- கரந்தன் வீதியில் 24 பரப்பு தோட்டக் காணி தனிக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி R.குணராசா, மே/பா ச.விவேகானந்தன், கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உரும்பிராய். (8714)

## வீடு தேவை

திருநெல்வேலி, கோண்டாவில், கல்வியங்காடு, கொக்குவில் பகுதிகளில் ஏதாவது ஒரு பிரதான வீதிக்கு அண்மையில் வீடு குத்தகைக்கு அல்லது வாடகைக்குத் தேவை. (கூடுதல் குத்தகை தரப்படும்) தொடர்பு: விளம்பர இல. 1656, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8678)

## நாடகநூல் விமர்சனம்

24.09.2002 உதயனில் பிரசுரிக்கப்பட்ட அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'எங்கள் நாடு' நூலுக்கு கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை எழுதிய விமர்சனத்தை வாசியுங்கள். நீங்களும் நாடக நூல் விமர்சனம் எழுதக் கற்கலாம். (8679)

## ஜோதிடம்

உங்கள் ஜாதக இரகசியங்களை அறிந்திடவும், திருமணப் பொருத்தம், கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் கணித்திடவும் உடன் தொடர்புகொள்ளவும்: N.கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (8478)

## மணமக்கள் தேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் பணிபுரியும் மணமக்களுக்கு பட்டதாரி அல்லது A/L, O/L படித்த மணமக்கள் தேவை. ஜாதகம், போட்டோ என்பவற்றுடன் 30.09..2002இற்கு முன்னர் தொடர்புகொள்ளவும். N.கந்தையா, மூத்தவிநாயகர் கோயிலடி, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.(8718)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### HAPPY BIRTHDAY



திரு.திருமதி சதீஸ்குமார் – சித்திரா தம்பதியரின் செல்வப் புதல்வன்

### செல்வன் விஷ்ணுப்பிரியன்

அவர்கள் இன்று(26.09.2002) வியாழக்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை தன்னுடைய இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

விஷ்ணுப்பிரியனை அப்பா, அம்மா, அக்கா அன்ஜா, அண்ணா நிஷாந், சின்னண்ணா கஜமுகன், ஆசை அண்ணா கார்த்திகேயன், அன்பு அண்ணா வைஷ்ணவிப்பிரியன், சிறிமாமா, ரமணன் மாமா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, ஐயா, கஸ்தூரி அன்ரி, அத்தை, பெரியப்பா, பெரியம்மாமார், சித்திமார், சித்தப்பாமார், உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவரும் பல்கலைகளும் கற்று சீரோடுஞ் சிறப்போடும் பல்லாண்டு வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

*இல.33, கண்ணாபுரம், கொட்டடி, யாழ்ப்பாணம்.* - பாசமிகு அப்பா, அம்மா. (8715)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. மாணிக்கம் அனந்தராசன்

21.09.2002 சனிக்கிழமை கொழும்பு சுகததாசக் கலையரங்கில் இலங்கை மின்சார சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட "நீண்டகால சேவை விருது வழங்கல்" நிகழ்வில் தங்கப்பதக்கமும், சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட, அல்வாயூர்க் கவிஞர் செல்லையா வீதியைச் சேர்ந்தவரும், பருத்தித்துறை இ.மி.ச. மின்பாதையாளரும், இ.மி.ச. (வடமாகாணம்) ஊழியர் நலன்புரிச்சங்க நிர்வாக உறுப்பினரும், இசை நாடகக் கலைஞருமான **திரு. மாணிக்கம் அனந்தராசன்** அவர்களை ஆலடி ஐங்கரனின் அருள்பெற்று நீடூழி வாழ நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: செ.வீரராசா குடும்பத்தினர், வே.க.தங்கவேல் குடும்பத்தினர், வே.க.வரதவேல் குடும்பத்தினர்.

*"செல்வகிரி" அல்வாய்.* (8720)

---

**யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவர் விடுதி - மாணவிகள் விடுதி திருத்தம்**

**07.09.2002அம் திகதியன்று உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட மேற்கூறிய வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு திகதி மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.**

*சி.சிவராசா*
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(C/23949)

---

## நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்

2ஆம் ஆண்டு | 4ஆம் ஆண்டு



திருமதி கந்தர் சேதுப்பிள்ளை



திருமதி மயில்வாகனம் றெஜீனா

14.07.1916 ← பிறப்பு → 18.08.1946

26.09.2000 ← இறப்பு → 03.10.1998

*என்றும் எம் நினைவில்.....*

*அளவெட்டி தெற்கு, அளவெட்டி.* *211, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.* (8719) குடும்பத்தார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 - 09 - 1934



விண்ணில் 29 - 09 - 1999

### அமரர் வேலாயுதர் கந்தையா

*(ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்)*

*திதி: பஞ்சமி 26-09-2002*

கதறி அழுதாலும் என் கவலை தீராதையா!
காலங்கள் உள்ளவரை கண்ணீர்தான் எனக்கு!
இனியவனே! உனை இதயத்தில் இருத்திவிட்டு
இருளில் தவிக்கின்றேன்! இன்னலில் துடிக்கின்றேன்!
உதயமே இல்லாது உருக்குலைந்து தவிக்கின்றேன்!
மூன்றாண்டுகள் என்ன எத்தனை ஜென்மம் போனாலும்
ஓயாது என் துயர், மாறாது என் கவலை!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

*பிள்ளையார் வீதி முகப்பு, அளவெட்டி.* பாசமிகு மனைவி கந்த விக்கி. (8696)

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### அரியகுட்டி நாகரத்தினம்

(குகன்)

(உரிமையாளர், குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை.)

மலர்வு 15 - 01 - 1917 | உதிர்வு 26 - 09 - 1997

திதி: 01-10-2002

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி!

குகன் ஸ்ருடியோ *பருத்தித்துறை.* (8689)

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

உ
சிவமயம்

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

மண்ணுலகில் 11 - 02 - 1940



விண்ணுலகில் 25 - 08 - 2002

### அமரர் வைரவி இளையகுட்டி

**அன்பிலே ஆண்டவனாய் பண்பிலே தெய்வமாய்**
**பாசமென்னும் கயிற்றால் எங்களைக் கட்டியணைத்த திருவுருவே!**
**எங்கள் உள்ளக் கோயிலில் அணையாத ஜோதியே!**
**அணைந்தாலும் வாழ்வீரே எங்களுடன்.**

இன்று (26.09.2002) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஏழாலை தெற்கு, மயிலங்காடு, சுன்னாகம்.* (8704) மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## அம்பாறை மத்திய முகாம் தாக்குதல் சம்பவம்:

# 5 வருடங்களாக நடந்த 52 அணி வகுப்புகளில் மூன்று பொலீஸார் இனங்காணப்பட்டுள்ளனர்!

## 400 பேரில் 104 பேரே அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டனர்

காரைதீவு,செப்.26

அம்பாறை மாவட்ட மத்திய முகாம் தமிழ்க் கிராமம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கடந்த ஐந்து வருடங்களாக இடம்பெற்று வந்த அடையாள அணிவகுப்புகள் பூர்த்தியடைந்துள்ளன.

முகாம் மீதான தாக்குதல் சம்பவ தினத்தன்று மத்திய முகாம் பொலீஸ் நிலையத்திலிருந்த 400 பேரை 200 தடவைகளில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தவேண்டும் என்று கல்முனை மாவட்ட நீதிமன்றில் அப்போதைய நீதிபதி அன்ரன் பாலசிங்கம் உத்தரவிட்டார்.

அதற்கமைய 1997இலிருந்து 5 வருடங்களாக அடையாள அணிவகுப்புகள் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் பெரும் பரபரப்புடன் இடம்பெற்றுவந்தன.

இதுவரை 52 அடையாள அணிவகுப்புகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 104 பொலீஸார் அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மீதி 296 பொலீஸார் அல்லது ஊர்காவல் படைவீரர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது என பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி எம்.கே.பேரின்பராஜா கூறினார்.

அணிவகுப்புகள் யாவும் தற்போது நிறைவுபெற்றுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதுவரை இடம்பெற்ற 52 அணி வகுப்புகளிலும் மூன்று பொலீஸார் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கெதிரான விசாரணை தற்போது ஆரம்பித்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட காமினி குமாரசிங்க, விமல் வசந்தகுமார, ஜே.என்.கருணாரத்ன ஆகியோருக்கெதிராக கொலைக் குற்றச்சாட்டு, சொத்தழித்தல் குற்றச்சாட்டு, அத்துமீறிப் பிரவேசித்தல் குற்றச்சாட்டு என்பன சுமத்தப்பட்டு நீதிவான் நீதிமன்றில் விசாரணை ஆரம்பமாயிருக்கிறது.

அம்பாறை மத்திய முகாம், கொலனி தமிழ்க் குடியிருப்புகளில் 1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி இரவு புகுந்த பொலீஸார் மற்றும் ஊர்காவல் படையினர் அங்கிருந்த குடியிருப்புகளில் 47 வீடுகளைத் தீக்கிரையாக்கியதுடன் 5 பொதுமக்களையும் படுகொலை செய்தனர்.

மனித உரிமைகள் இல்லம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு சார்பாக சட்டத்தரணி எம்.கே. பேரின்பராஜா வழக்கைத் தாக்கல் செய்து பாதிக்கப்பட்டவர் நலன்சார்பாக வாதாடி வருகிறார். (ஐ)

## இன்று மஹாபொல கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு 2001-2002ஆம் கல்வியாண்டில் அனுமதிபெற்ற மாணவர்களுக்கான ஏழு தவணைகளுக்குரிய மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு இன்று வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் வழங்கப்படவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையின் உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (ஐ-9)

## 'ஞானச்சுடர்' வெளியீடு

வடமராட்சி,செப்.26

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மீக சஞ்சிகையின் புரட்டாதி மாத இதழ் வெளியீட்டு விழா நாளை 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் இ.நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ கு. தியாகராஜ சர்மாவும், மதிப்புரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் நிகழ்த்துவார்கள். (ஐ-173)

# சமூகநல அமைப்புகளை பதிவுசெய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.26

பதிவுசெய்யப்படாமல் இயங்கி வருகின்ற தொண்டர், சமூகசேவை அமைப்புகள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் யாவும் சமூக நலன்புரி அமைச்சினால் பதிவுசெய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவை தவிர்ந்த ஏனைய அமைப்புகளே தற்பொழுது பதிவு செய்யப்படவுள்ளன. இது தொடர்பான சுற்றறிக்கை அரசாங்க அதிபருக்கும் சகல பிரதேச செயலர்களுக்கும் சமூக நலன்புரி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பொருளாதார, சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மேற்படி அமைப்புகளின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதன் அடிப்படையில் பிரதேச மற்றும் கிராம மட்டங்களில் செயற்படும் சமுதாய மட்டத்திலான அமைப்புகளான கிராம அபிவிருத்திச் சங்கங்கள, விவசாய அமைப்புகள், விளையாட்டுக்கழகங்கள், பெண்கள் அமைப்புகள், இளைஞர் கழகங்கள், நீர், மின்சார பாவனைக் கழகங்கள் ஆகியனவே பதிவுசெய்யப்படல் வேண்டும்.

எழுத்து மூலமான அரசியல் அமைப்புமுறையில் நிர்வகிக்கப்படுதல, பதவிகள் மற்றும் உறுப்பினர்கள் ஒரு குடும்பத்துக்கோ அல்லது ஒரு சில குடும்பங்களுக்கோ மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமை, அரச அல்லது அரசசார்பற்ற அமைப்புகளில் திட்ட அமுலாக்கல், பங்குதார அமைப்பாக ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம், போதுமான நிதி வசதி ஆகியன உள்ள அமைப்புகள், கழகங்கள், சங்கங்கள் என்பன பதிவு செய்யமுடியும் என்று அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# திருமலை நீதிமன்றில் ஒன்பதுபேர் விடுவிப்பு

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் குற்றம் சுமத்தப்பட்ட ஒன்பது பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் விலக்கிக் கொண்டதை அடுத்து ஒன்பது பேரும் விடுவிக்கப்பட்டனர்.

திருகோணமலையில் கூடிய கிழக்கு மாகாணத்துக்கான அமர்வு மேல் நீதிமன்றமே கடந்த திங்கள் அன்று இந்த ஒன்பது பேரையும் விடுவித்தது.

அரச சட்டத்தரணி எஸ்.கண்ணன் இந்த ஒன்பது பேருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபரின் சிபாரிசுக்கு அமைய தாம் வாபஸ் பெறுவதாக நீதிமன்றத்தில் தெரிவித்ததை அடுத்து நீதிபதி ஜே.விஸ்வநாதன் அவர்களை விடுதலை செய்யும் உத்தரவைப் பிறப்பித்தார். விடுவிக்கப்பட்டோரின் விவரம் வருமாறு:-

★ சித்திரவேலு பரமநாதன் (கஜன்) - உப்புவெளி

★ சந்திரராஜா ரவிக்குமார் - புதுக குடியிருப்பு

★ டேவிட் சில்வா விஜயகுமார்-தம்பலகமம்

★ சுந்தரமூர்த்தி ராஜமோகன் (விஜித்) - கந்தளாய்

★ சாமித்தம்பி ஈஸ்வரன் - உவர் மலை

★ பி.பாலமோகன் - கண்ணகிபுரம்

★ எஸ்.பரமேஸ்வரன்-உவர்மலை

★ கனகரட்ணம் உதயகுமார்-உவர்மலை

★ கந்தையா புவிராஜ்-திருகோணமலை (ஐ)

# கொத்தணி பஸ் நிறுவனங்களின் பங்குகள் விற்பனை ஒத்திவைப்பு

கொத்தணி பஸ் நிறுவனங்களின் 39 சதவீத பங்குகளை ஏலத்தில விடுவது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. கொழும்பு பங்குச் சந்தையில் இந்த ஏலவிற்பனை நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்தது.

பொது நிறுவனங்கள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் ஏற்பாட்டிலான இந்த ஏல விற்பனைமூலம் 601 கோடி ரூபாவைத் திரட்டத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிறுவனங்களின் 51 சதவீத பங்குகள் அரசுக்குச் சொந்தமாக இருக்கும். எஞ்சிய 10 சதவீத பங்குகள் ஊழியர்களுக்கு வழங்கப்படும்


இந்த ஏல விற்பனையை எதிர்தது ஊழியர்கள் சங்கம் ஒன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மனு ஒன்றை அடுத்தே ஏல விற்பனை ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# மக்களின் சகல தேவைகளையும் பூர்த்திசெய்திடும் 'டியூரோ'

ஈழத்தின் முன்னணி பி.வி.சி. குழாய்கள் உற்பத்தியாளர்களான 'டியூரோ' தங்களது வடபகுதிக்கான விநியோக சேவையை யாழ்ப்பாணத்தில் இல.95/.., ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும் "நாராயணா ஹாட் வெயர்ஸ் ட்ரேடர்" மூலமாக ஆரம்பித்திருக்கிறார்கள்.

நுகர்வோருக்கு மிகவும் தரமான பொருளை அவர்களின் தேவைக்கேற்ப, தேவையான சமயத்தில் வழங்குதல் டியூரோ நிறுவனத்தின் தாரக மந்திரமாகும். பல்வேறு சூழ்நிலைகளின் மத்தியிலும் யாழ்.மக்களுக்கு தங்களது பி.வி.சி. குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் மிகவும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்பது இவர்களின் அவா.

டியூரோ நிறுவனம் தமது பி.வி.சி. குழாய்கள் மற்றும் இணைப்புகளுக்கு SLS 147 தரச் சான்றிதழ் கொண்டதன் மூலமாக தமது நிறுவனத்தின் மேல் நுகர்வோருக்குள்ள மதிப்பை மேலும் உயர்த்திக் கொண்டுள்ளது.




கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக பி.வி.சி. குழாய்கள் உற்பத்தியில் முக்கிய பங்காளர்களாகத் திகழும் டியூரோ நிறுவனத்தார் யாழ். மக்களின் நன்மை கருதி தமது விலைகளை தமது போட்டியாளர்களிடையே மிகவும் நியாயமானதும், கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியானதுமாக நிச்சயித்திருக்கிறார்கள். இதேவேளை, டியூரோ பொருள்களின் தரம் மிகவும் உன்னதமானதாகவும் நுகர்வோரின் தேவையை சிறந்த முறையில் பூர்த்திசெய்யக்கூடியதாகவும் அமைந்திருப்பது 'டியூரோ' நிறுவனத்தின் மற்றுமொரு தீரச்சான்று.

டியூரோ நிறுவனம் சர்வதேச தரச்சான்றிதழான ISO 9002 பெற்ற நிறுவனம் என்பது இன்னுமொரு பெருமைக்குரிய விடயமாகும்.

பி.வி.சி. நீர் விநியோகக் குழாய்கள், கழிவுநீர் வெளியேற்றும் குழாய்கள், மின்விநியோக வயர்காப்பு குழாய்கள் மற்றும் தரமான உதிரிப் பாகங்களும் இணைப்புகளும் என டியூரோ பொருள்களின் பட்டியல் மிகவும் நீண்டு அனைத்து வழியிலும் நீர் விநியோக, கழிவு நீர் வெளியேற்ற, மின்விநியோக காப்பு என நுகர்வோரின் சகல தேவைகளையும் அனேகமாகப் பூர்த்திசெய்கின்றது.

டியூரோ சர்வதேச நிறுவனங்களான இத்தாலியின் COMER மற்றும் PRINCE நிறுவனங்களுடன் இணைந்து தரமான பொருள்களை நுகர்வோரின் தேவைக்காக இறக்குமதி செய்து விநியோகிக்கின்றது.

மேலும், யாழ். பகுதியில் தமது பொருள்கள் தரமான மற்றும் மிகவும் நியாயமான விலையில் கிடைப்பதற்காக தமது ஏக விநியோகஸ்தர்களான "நாராயணா ஹாட்வெயர்ஸ் ட்ரேடர்" அவர்களுடன் இணைந்து மிகவும் உன்னதமான திட்டத்துடன் செயலாற்ற இருக்கிறது.

நாராயணா ஹாட்வெயர்ஸ் ட்ரேடர் என்பது யாழ்.மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் மிகவும் பெற்ற "ரூபா ட்ரேடர்ஸ்" அவர்களின் இணை நிறுவனமாகும். இத்தகைய நன்மதிப்பைப் பெற்ற நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றுவதில் டியூரோ நிறுவனம் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சிடைகிறது. ☆

# வேலைவாய்ப்புகள் அதிகமுள்ள ஹோட்டல் முகாமைத்துவம்

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இலங்கை உல்லாசப் பயணச் சபை யாழ்ப்பாணத்தில் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ ஸ்தாபனத்தின் கிளையைத் தொடங்கியுள்ளது. அதில் வரவேற்பாளர், பொதுவிடங்கள் மற்றும் அறைகள் ஆகியவற்றின் பராமரிப்புப் போன்ற பணிகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இந்த வகுப்புகளை அனுபவம் மிக்க பயிற்சியாளர்கள் நடத்துகிறார்கள். அத்தோடு ஆங்கிலம், பிரெஞ்சுமொழிகளும், இலங்கையில் சுற்றுலா முக்கியம் வாய்ந்த இடங்களைப்பற்றிய படிப்புகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வகுப்புகள் ஹோட்டல் முகாமைத்துவம் படித்துமுடிக்க ஒரு அடிக்கல்லாக அமையும்.

அதுமட்டுமன்றி இலங்கை உல்லாசப் பயணச் சபை நடத்தும் இந்த முகாமைத்துவ வகுப்புகள் இலங்கையிலும் பிறநாடுகளிலும் அங்கீகாரம் பெற்றவையாகும்.

ஆகவே, குடாநாட்டு இளைய தலைமுறையினர் ஹோட்டல் முகாமைத்துவம் படிக்கவும், அதன்மூலம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கும் இது ஓர் அரிய வாய்ப்பு என்பதில் ஐயமில்லை. இந்தப் பயிற்சி வகுப்புகள் குறித்து மேலும் அறிய விரும்புவோர் ஸ்ரீலங்கா சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் (யாழ்ப்பாணக் கிளை), மணியம் கட்டடம், சிராம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம். ☆

# பணத்திற்காக மக்களையும் கட்சியையும் காட்டிக் கொடுக்கும் எம்.பிக்கள் பலர்

## இதுவே இன்றைய துர்ப்பாக்கிய நிலை என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,செப்.26

நாடாளுமன்றத்திற்குச் செல்லும் அநேகமான மக்கள் பிரதிநிதிகள் பணத்திற்கும் வேறு லாபங்களுக்காகவும் மக்களையும் தமது கட்சியையும் காட்டிக்கொடுக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகின்றார்.

அமரர் டென்சில் கொப்பேகடுவவின் 19ஆவது நினைவுதின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இன்று கௌரவமான எவரும் அரசியலுக்கு வருவதில்லை. நாடாளுமன்றத்தை வியாபாரமாகக் கருதிக் கொண்டு இன்று அநேகர் அரசியலுக்குள் பிரவேசிக்கின்றனர். ஆனால், அனைவரும் இவ்வாறில்லை; வாகனத்திற்காக, வாகன அனுமதிப் பத்திரத்திற்காக, இருக்கும் வீட்டை விடப் பெரிய வீட்டிற்காக, ஒருகோடி, இரண்டு கோடி ரூபா பணத்திற்காக மக்களைக் காட்டிக்கொடுக்க சில அரசியல்வாதிகள் இன்று தயாராகவுள்ளனர்.

எமக்காக 17 வருடங்கள் அடிவாங்கிய மக்களுக்கு என்ன நடக்கும்?

இரத்த வெள்ளத்தின் நடுவே நாடாளுமன்றத்திற்குச் சென்றுவிட்டு, வாக்களித்த மக்களை ஏமாற்ற நினைக்கின்றனர் சிலர்.

அமைச்சுப் பதவி காணாது, பிரதி அமைச்சர் பதவி போதாது, எனக்குப் பிந்தித்தான் அமைச்சுப் பதவி தந்தீர்கள் என்றெல்லாம் கூறி இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் செல்கின்றனர்.

இல்லாவிட்டால் இங்கிருந்து கொண்டு எமது கட்சியைச் சீரழிக்கின்றனர். இன்று இந்த நிலைமைதான் உள்ளது - இப்படி ஜனாதிபதி தனதுரையில் தெரிவித்தார். (ஐ)

# அதிகாரம் தமது பக்கம் உள்ளதாக அமெரிக்காவிலும் மஹிந்த சூளுரை!

கொழும்பு,செப்.26

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் இன்னமும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமே உள்ளது. நாட்டுக்கு ஆபத்தான நிலை ஒன்று ஏற்படுமேயானால் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த அவர் பின்னிற்கமாட்டார். ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க அரசு 19ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றில் கொண்டுவந்தாலும் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிட்டாது.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்காவின் லொஸ் ஏஞ்ஜலஸ் நகரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இவ்வாறு கூறினார்.

அமரர்களான பண்டாரநாயக்கா, சிறிமா பண்டாரநாயக்கா ஆகியோரின் நினைவு நிகழ்ச்சியில் அங்கு அவர் கலந்துகொண்டார். பின்னர் பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது.

அந்த மாநாட்டில் மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறியதாவது:-

இன்றைய அரசின் சமாதான நடவடிக்கைகளை பொ.ஐ.முன்னணி குழப்பாது. ஜனாதிபதியினாலேயே சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. சமாதானம் என்ற போர்வையில் அரசுடைமைகளைக் கொள்ளை இலாபத்துக்கு விற்கப்பார்க்கிறது ஐ.தே.மு. அரசு.

கல்வி, சுகாதாரம், வங்கி, காப்புறுதி, போக்குவரத்து ஆகியவற்றையும் லாபமீட்டும் சேவைகளையும் தனியார் மயப்படுத்துவதை நாம் எதிர்க்கின்றோம். அரசின் தவறான கொள்கைகளுக்கு எதிராக நாம் மக்களை ஒன்று திரட்டுவோம் - என்றார். (ஐ)

## நிறுவனம்சார் பட்டதாரி ஆசிரியர்கள் நூலகருக்கான நேர்முகத் தேர்வில் மீண்டும் திகதி மாற்றம்

மேற்படி பட்டதாரி ஆசிரியர்கள் நூலகருக்கான நேர்முகத் தேர்வு முன்னர் அறிவித்தபடியல்லாது எதிர் வரும் 29.09.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கண்டிப் பாக நடைபெறும் என்பதைச் சம்பந்தப்பட்ட விண்ணப் தாரர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*வன்னி.* (சி-23965) - நிறுவனப் பொறுப்பாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவன்

### செல்வன் யோ.கார்த்திபன் *(தீபன்)*



அவர்கள் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை 2002இல் 135 புள்ளி களைப் பெற்று சித்திபெற்றமைக் காக அவரைப் பாராட்டுவதுடன், அவருக்குக் கல்வி கற்பித்து அறி வூட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் குகன் கல்வி நிறுவன இயக் குநர், ஆசிரியர்களுக்கும் (ஆவரங் கால்) நன்றிகள் கூறி அவர் மேன் மேலும் கல்வியில் சிறப்புற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, தங்கை (சங்கவி), அம்மப்பா, மாமாமார், அத்தைமார், அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார்.

*"நாகபூஷணி இல்லம்', சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.* (8722)

## *யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின்*

லியோ கழக அனுசரணையுடன்
வணிக மாணவர்களுக்கான
கணக்கீடு பாட

### விசேட கருத்தரங்கு

*இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, தம்பர் மண்டபம்*
*காலம்:* நாளை (27.09.2002) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி
*தலைமையுரை:* திரு.க.இராசதுரை (அதிபர், யாழ். மத்திய கல்லூரி)
*தொடக்கவுரை:* திரு.க.தேவராஜா (தலைவர், வணிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
*நிகழ்த்துபவர்:* திரு.அ.கலைச்செல்வன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

கணக்கீடு பாடம் தொடர்பான பல புதிய விடயங்கள் கலந் துரையாடப்படவேண்டியுள்ளதால் சகல வணிக பாட பாடசாலை மாணவர்களையும் சீருடையுடன் கலந்துகொள்ளுமாறு அழைக் கப்படுகின்றனர்.

(8725) லியோ கழகம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## நெஞ்சம் கலங்கி நிற்கும் ஓராண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | ஆண்டவன் அணைப்பில் |
|---|---|---|
| 30 - 03 - 1994 | | 22 - 09 - 2001 |



### செல்வி ருணித்தா சிவனேஸ்வரன்

ருணித்தாவே!
நம்பமுடியவில்லை; உன் சிரிப்பும் துடிப்பும்
அடங்கிப்போய் விட்டதா?
ஒருநாள் எங்களை நீ கண்ணீரில்
ஆழ்த்தியபோது நம்பமுடியவில்லை!

*உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*
அன்பு அப்பா - சிவனேஸ்வரன் (லண்டன்)
அம்மா - சுசிமலர்
அண்ணா - துயிவன்
பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, அப்பம்மா, அம்மம்மா.

*கைதடி மத்தி, கைதடி.* (8738)

## நண்டு பிடிக்கும் பறிகள் சேதம்: மீனவர் விசனம்

வலி.வடக்கு,செப்.26

கடந்த சில நாள்களாக ஊர்காவற் றுறை துறைமுகத்துக்கு அண்மை யில் கடற்பகுதியில் நண்டு பிடிப் பதற்கு வைக்கப்படும் பறிகள் சேதப் படுத்தப்பட்டு வருவதாக ஊர்காவற் றுறை மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஊர்காவற்றுறை துறைமுகத்துக்கு அண்மையாக கடந்த சில நாள்களாக மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு மீனவர்கள் அனுமதிக்கப்பட்டு தொழிலை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில், நண்டுக்காக வைக்கப்பட்ட பறிகள் சேதப்படுத்தப் பட்டு, நடுக்கடலில் கொண்டுபோய் வீசப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இத்தகைய அடாவடித்தனமான செயல் குறித்து மீனவர்கள் கவலை அடைந்துள்ளனர். (ஓ-86)

## சர்வோத இயக்கம் விவசாய உதவி

வடமராட்சி கிழக்கு,செப்.26

சர்வோதய இயக்கம் வடமராட்சி கிழக்கிலுள்ள செம்பியன்பற்று தெற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு காலபோக விதைப் பிற்காக 25 புசல் விதை நெல்லி னையும், 25 மண்வெட்டிகளையும், 25 குடும்பங்களுக்கு காய்கறி விதை யினையும் இலவசமாக வழங்கவுள் ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளையின் சிபாரிசிற்கமைய இவை வழங்கப்பட வுள்ளன. (ஓ-182)

## பெறுமதிகூடிய முத்திரைகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்பிரதம தபாலகத்துக்கு பெறு மதிகூடிய முத்திரைகள் நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன.

எடுத்தவரப்பட்ட 500 ரூபா மற் றும் ஆயிரம் ரூபா முத்திரைகள் இன்று பொதுமக்களுக்கு விநியோ கிக்கப்படவுள்ளதாக பிரதம தபா லதிபர் எஸ்.இராஜதுரை தெரிவித் துள்ளார். (ஓ-10)

## வீடு வாடகைக்கு உண்டு

சகல வசதிகளும் கொண்ட நாற்சார் வீடு வாடகைக்கு உண்டு.

"கமலா வாசா"
இல.3. சந்நனமாதா ஒழுங்கை.
பாண்டியன் தாழ்வு.
யாழ்ப்பாணம். (8742)

## நியூ மற்ஸ் அக்கடமி

மீசாலை
புலமைப் பரிசில் பரீட்சை - 2002
பாராட்டுகின்றோம்

| | | |
|---|---|---|
| 1. | இ.தர்மிகா | - 157 |
| 2. | த.சயித்தா | - 145 |
| 3. | பு.நிசாந் | - 138 |
| 4. | சு.பகீரதன் | - 138 |
| 5. | ச.சாங்கீதன் | - 137 |
| 6. | சூ.தர்மிகா | - 133 |
| 7. | க.அனுஷாந் | - 133 |
| 8. | இ.உமைப்பிரியை | - 132 |
| 9. | கு.மயூறாம் | - 129 |
| 10. | சி.உதயசங்கர் | - 126 |
| 11. | இ.கவிவர்மன் | - 125 |
| 12. | உ.ருசானி | - 123 |
| 13. | கி.சபிந்தா | - 123 |
| 14. | சி.கபிலக்ஷன் | - 122 |
| 15. | ப.ஐங்கரன் | - 120 |
| 16. | பா.தாரணி | - 118 |

இந்த மாணவர்களைப் பாராட்டுவதுடன் வெட்டுப்புள் ளிக்கு அண்மித்த மாணவர் களையும் பாராட்டி வாழ்த்துகின் றோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள்.

(C/23963)

## விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையில் உள்ள லான்ட் மாஸ்ரர் எஞ்சின், 03 கி.வாட்ஸ் டைனமோ, றோனியோ, தட்டச்சு இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:* ப.சிறி
*சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.*
(8726)

## COOL LAMINATING கவரிடுதல்

குறைந்த செலவில் நினைவு மலர்களை. பல வர்ணப் படங்களை அச்சிட்டு கவர் Laminating செய்துகொள்ள நாடுங்கள்:

பிள்ளையார் அச்சகம், நல்லூர். (8734)

## யாழ்ப்பாணம் மாநகரசபை அறிவித்தல்

### நடைபாதை வியாபாரம்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் போக்கு வரத்திற்கு இடைஞ்சலான முறையில் நடைபாதைகளில் வியா பாரம் செய்யும் வியாபாரிகள் உடனடியாக அவ்விடத்தைவிட்டு வெளியேறுமாறு கேட்கப்படுகின்றீர்கள். வெளியேறாது தொடர்ந் தும் அவ்விடத்தில் வியாபார நடவடிக்கையிலீடுபட்டால் அவர் களது பொருள்கள் பறிமுதல் செய்யப்படும் என்பதோடு உரிய சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம், 2002.09.24. (C/23967)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

## அகவை அறுபதில் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமறைக் கலாமன்ற வெளியீடான *"கலைமுகம்"* காலாண்டிதழின் இணையாசிரியர்

### உயர்திரு. P.S.அல்பிரட்

அவர்கள் இன்று 26.09.2002 வியாழக் கிழமை அகவை அறுபதில் காலடி எடுத்து வைப்பதையிட்டு நாம் அவரை மேன்மேலும் சிறப்புடன் மிளிர வேண்டு மெனப் பாராட்டி அகமகிழ்ந்து வாழ்த் துகின்றோம்.

செல்வி சறோஜா,
திரு. திருமதி. ஜெயசிங்கம்,
திரு. திருமதி அன்ரனிப்பிள்ளை,
திரு. திருமதி மரியநாயகம்.

(8732)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் துரைசிங்கம்

*(முன்னாள் முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம், சாவகச்சேரி)*

மட்டுவில் மத்தி, சிவன் கோயிலடியைச் சேர்ந்த பொன்னம்பலம் துரைசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (24.09.2002) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தெய்வானைப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் இராசையா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோ ரின் மைத்துனரும் சிவபாக்கியம், தனலட்சுமி ஆகியோரின் சகோதர னும் மங்கையர்க்கரசி, ஜெயலட்சுமி, மங்களேஸ்வரி, கெங்காதரன் (சுவிஸ்), மனோரஞ்சி, மல்லிகாதேவி, செந்தில்வேல் (சுவிஸ்), சண்முக வடிவேல் (கனடா), கலாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தின சபாபதி (ஓய்வுபெற்ற லிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்), செல்வராஜா (ஓய்வுபெற்ற ஊழியர், கூட்டுறவு அச்சகம், யாழ்.), இராசநாயகம் (விசுவமடு), கலாவதி (சுவிஸ்), தர்மராஜா (சுகாதாரத் திணைக்கள சாரதி), தம்பிரத்தினம் (தம்பி பழக்கடை, சுன்னாகம்), இராஜேஸ்வரி (சுவிஸ்), பிறேமாவதி (கனடா), உமாமகேஸ்வரன் (யா/அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலகிருஷ் ணன் ஹரப்பிரியா (சுவிஸ்), குமுதினி ஜனார்த்தனராஜா (H.N.B. யாழ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவானி - மோகனராஜன் (ஜேர்மனி), கௌரி - ஸ்ரீசண்முகநாதன் (ஆய்வுகூட உதவியாளர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி), பாலகுமாரன் - சரோஜினி (சுவிஸ்), குகதர்சினி - சிவகரன் (ஜேர்மனி) சிவகுமரன் (லண்டன்), ஜனாதரன் - சுவேந்தினி (சுவிஸ்), உஷாநந்தினி - சுகுமார் (சுவிஸ்), சிவரூபன் (லண்டன்), ஜெயநந்தினி கமலநாதன் (லண்டன்), கேமா (வவுனியா - கணனித்துறை மாணவி), அபிநயா (சுவிஸ்), சர்மிலன் (ஹொலண்ட்), கிரிகரன் (யா/யூனியன் கல்லூரி), சுகந்தினி (யா/இராமநாதன் கல்லூரி), சிவபரன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தர்மினி (கோண்டாவில் இந்து மகாவித்தியாலய, கணனி ஆசிரியை), தசன் (லண்டன்), மாலினி (யா/ஸ்கந்தவரோதய கல்லூரி), மயூரன், கோகுலன் (யா/யூனியன் கல்லூரி), சுகீனா, சுஜீபன் (சுவிஸ்), முரேஸ், பிரசாந், நவீனா (கனடா), சிவகபிலன் (மட்டுவில்), நிஷாந்தன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேரனும் பிரவீன், அஸ்வினி (ஜேர்மனி), அக்ஷி, தீபிகை (யா/உடுவில் மகளிர் கல்லூரி), கர்ஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோயிலடி, மட்டுவில் மத்தி., சாவகச்சேரி.* (8716)

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

## செல்லையா அருளானந்தம்

வல்வெட்டி, பாமன் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அருளானந்தம் (முன்னாள் போக்குவரத்து முகா மையாளர், கல்லோயா அபிவிருத்திச் சபை) நேற்று (25.09.2002) புதன்கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

தகவல்: திருமதி பானுமதி அருளானந்தம் (மனைவி), பிள்ளைகள்.

*"பாமன்தோட்டம்" வல்வெட்டி.* (8733)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சிறுப்பிட்டி
இந்து தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2002இல்
சித்தியடைந்த மாணவர்களான,

1. ஸ்ரீஸ்கந்தராசா வரோதயன் - 149 புள்ளிகள்
2. யோகநாதன் கார்த்திபன் - 135 புள்ளிகள்
3. விஜயராசன் பாலசயந்தன் - 126 புள்ளிகள்
4. குமரேஸ்வரன் கர்ஜனா - 125 புள்ளிகள்
5. மகேந்திரன் தயாளினி - 119 புள்ளிகள்

ஆகியோரைப் பாராட்டுவதுடன், இவர்களது சித்திக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும் கூறி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

சிறுப்பிட்டி. (8723)
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்,
பெற்றோரும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை
தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2002இல்
சித்தி பெற்ற மாணவர்களான

1. க.அனோஜன் - 157
2. சு.சாதனா - 154
3. ச.டினோஜா - 146
4. ப.லக்ஸ்சிகா- 132
5. க.றஜீந்தன் - 128
6. ப.சிவஜா - 120

ஆகியோரையும் இவர்களோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான,

| | |
|---|---|
| உ.வர்ஜிதா - 115 | வி.பவித்திரா - 114 |
| த.சங்கீதா - 113 | இ.செந்தூர் - 112 |
| த.ஹேமா - 107 | த.லக்சிகா - 105 |
| பா.ஜெயப்பிரபா - 104 | ப.நிருஜா - 104 |
| ர.கமல்ராஜ் - 104 | ச.கஜானனன் - 102 |
| பா.கோபினா - 100 | |

ஆகியோரையும், மாணவர் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை. (8724)

## பிறந்தநாளில் நம் நல்வாழ்த்துக்கள்

எமது மாணவி
**செல்வி சிவராசா திலிஸ்கா**
அவர்கள்



5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 123 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்தமைக்காக அவரது (26.09.2002) 10ஆவது பிறந்தநாளில் அவருக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் கல்விக்காக உழைத்த *யா/கைதடி கலைவாணி வித்தியாலய* அதிபர், ஆசிரியர்களுக்கும் *மின்னொளி கல்வி நிலையத்தின*ருக்கும எமது பாராட்டுக்களையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெற்றோர்,
கைதடி மேற்கு.
யா/கைதடி கலைவாணி வித்தியாலய
பாடசாலைச் சமூகம். (8700)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 19 - 03 - 1945



இறப்பு 26 - 09 - 2001

**அமரர் செபஸ்ரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை**
(யேசுரட்ணம்)

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம்மனம்
ஈண்டு உங்களை நினைத்து நாம் ஏங்கியே தவிக்கிறோம்
அழகான புன்சிரிப்பும், அன்பான பேச்சும் என்றும் எம்மனதில்
நின்று நிழலாக உங்களை நித்தம் நினைக்கச்
செய்கின்றனவே!

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் இன்று (26.09.2002) வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*கனால் வீதி,*
*மாதகல்.* (8727)
உங்கள் நினைவில்:
மனைவி, மகன் குடும்பத்தினர்.


## தரம் 6 அனுமதி - 2003

**2002ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் எமது கல்லூரிகளில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அனுமதிக்காக 2002.10.23 (புதன்கிழமை)ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன் ஒப்படைக்குமாறு கோரப்படுகின்றனர்.**

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
அதிபர்,
வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை. (C/23962)


# வியாபாரிகள் தேவை

**வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, பொத்துவில், சம்மாந்துறை, யாழ்ப்பாணம், அம்பாறை, காத்தான்குடி, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளுக்கு வியாபாரிகள் தேவை.**




பலதரப்பட்ட மதிப்பு வாய்ந்த மின்சார உபகரணங்கள் மற்றும் உலக பிரசித்த உற்பத்திப்பொருட்கள் முதலானவற்றை கையிருப்பில் வைத்திருப்பதிலும் விநியோகிப்பதிலும் இலங்கையில் ஏக முகவராக நாம் விளங்கிவருகின்றோம்.

**▪ MAKITA ▪ PRESTO**
**▪ TAILIN ▪ ECLIPSE**
**▪ CARBORUNDUM**

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டியவர்கள்
துசித்த - 071 213882 அல்லது கபில - 077 343304

**பிரவுண் அன் கம்பனி லிமிடெட்**
481, டி.பி. ஜெயா மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே: 694158, 697111, 693411 பக்ஸ்: 679644

GRACE


## குளங்களை புனரமைக்க கோரிக்கை

வடமராட்சி கிழக்கு செப்.26
வடமராட்சி கிழக்கில் செம்பியன் பற்று தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான பகுதியிலுள்ள 37 குளங்கள் 11 வருட காலமாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளன.

இப்பகுதியில் உள்ள தூரிசு, வாய்க்கால் போன்றனவும் திருத்தியமைக்கப்படாத நிலையில் சேதமடைந்த நிலையிலேயே உள்ளன.

தற்போது இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளமையால் விவசாய நடவடிக்கைகளிற்கும் கால்நடைகளின் நீர்த்தேவைக்கும் அப்பகுதியிலுள்ள குளங்களை திருத்தியமைக்கும்படி அப்பகுதி விவசாயிகள் விவசாய திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இதன் பலனாக 10 குளங்களை முதற்கட்டமாக திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. (ஓ-182)

## வரணி பாடசாலை பரிசளிப்பு விழா

தென்மராட்சி,செப்.26
வரணி மகா வித்தியாலய பரிசுதினம் மற்றும் கல்வித் திணைக்கள நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட ஒலி, ஒளி சாதனக்கூட திறப்பு விழா ஆகியவை எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி காலை 9.00மணிக்கு நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் ந.நவரத்தினராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், சிறப்பு விருந்தினராக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசனும், கௌரவ விருந்தினராக கொழும்பு தொழில் அதிபர் க.சுப்பிரமணியரும் கலந்துகொள்வர். (ஓ-117)

## விவசாயிகள் ஏமாற்றம்

சாவகச்சேரி,செப்.26
தென்மராட்சி தெற்கு, தணங்களப்பு, மறவன்புலோ, கோவிலாக்கண்டிப் பகுதிகளில் 3 ஆயிரத்து 500 ஏக்கர் வயல்களில் காலபோக நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற இராணுவத் தளபதி லெப்ஜெனரல் லயனல் பலகல்லவின் அண்மைய அறிவிப்பைத் தொடர்ந்து, தென மராட்சி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் சு.சத்தியேந்திரா தலைமையில் வயல் பகுதிக்குச் சென்ற விவசாயிகள், அப்பகுதியில் மிதிவெடி எச்சரிக்கைப் பலகைகள் இருப்பது கண்டு ஏமாற்றத்துடன் திரும்பியதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக 521ஆவது இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடச் சென்ற பெரும்பாக உத்தியோகத்தர் அதிகாரிகளைச் சந்திக்க முடியாமல் திரும்பியதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-31)

## பளையில் மீண்டும் தபாலகம்

யாழ்ப்பாணம்,செப்.26
பளை தபாலகம் மீண்டும் பளையிலுள்ள தனியார் கட்டடமொன்றில் கடந்த திங்கட்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபர் என்.ஜெயரத்தினம் தபாலகத்தை வைபவரீதியாகத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பளை பிரதேச செயலர் எஸ்.புத்திரசிகாமணி, வவுனியா அஞ்சல் அத்தியட்சகர் வி.குமரகுரு, தமிழீழக் காவல்துறையின் பளைப் பொறுப்பாளர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த சூழ்நிலையை அடுத்து கரவெட்டி தபாலகத்தின் ஒரு பகுதியில் இவ்வளவு காலமும் பளை தபாலகம் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-10-117-182)

## வண்ணாங்கேணியில் மிதிவெடி அகற்றும் பணி தீவிரம்

வடமராட்சி கிழக்கு,செப்.26
பளைப் பிரதேசத்திலுள்ள வண்ணாங்கேணியில் ஏ-9 வீதியின் இருமருங்கிலுமுள்ள நிலப்பரப்பில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் பணி நடைபெற்றுவருகின்றது.

மனித நேய கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவினர் தற்போது கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஓ-182)

# Caliber




*ஒவ்வொரு தடவையும் வாழ்க்கையின மிகச் சிறந்த சவாரி*

- ஜப்பான் கவசாக்கி கம்பனியினால் வடிவமைக்கப்பட்டது.
- 111.6 CC உயர்சக்திவாய்ந்த 7.7 குதிரை வலு கொண்ட 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- சாதாரண சவாரிச் சூழ்நிலைகளில் லீட்டருக்கு 60 கி. மீ. உயர்வான பயன்.
- ஒவ்வொரு பயணத்தூரத்தையும் அளக்கும் ட்ரிப் மீட்டர்.
- கைபிடியை பூட்டுவதற்கும், ஸ்டார்ட் செய்வதற்கும் ஒரே பூட்டு.
- உயர்வான நம்பிக்கைக்கு இரட்டை எண்ணெய் வடிகட்டும் முறைமை.
- கவர்ச்சிகரமான வேகக்காட்டி, மின்சார டக்கோ மீட்டர், எரிபொருள் சுட்டி போன்ற கருவித்தொகுதிகளுடன்.

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 074-700677, 687175 ஹொட்லைன் : 074-715050

**விசாரணைகள்** குறிஞ்சி டிரேடர்ஸ், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
குறிஞ்சி டிரேடர்ஸ், 6, நவீன சந்தை, சாவகச்சேரி. தொலைபேசி : 021-2221

Mel Ads

# மாகாணங்களுக்கு இடையில் மக்கள் சென்று வருவதற்கு இனிமேல் வரி!

## மாகாண முதலமைச்சர்கள் ஒன்றுகூடி தீர்மானம்

கொழும்பு,செப்.26

ஒரு மாகாணத்தில் இருந்து இன்னொரு மாகாணத்திற்குச் செல்லும் போதும், வெளியேறும்போதும் வரி அறவிடும் நடைமுறையைக் கொண்டு வருவதற்கு மாகாண சபைகள் தயாராகிவருகின்றன.

அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைவாக இதனை மேற்கொள்வதற்கு மாகாண முதலமைச்சர்களின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பேட்டி பிரேமலால் திஸ்ஸநாயக்கா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மாகாண சபைகள் மேலதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளன என்று அவர் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தற்போது வருமானம் ஈட்டிக்கொள்ளும் முறைகளைப்போல் நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் வருமானத்தை ஈட்டிக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த வரிஅறவீடு பொருள்களின் விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் மேற்கொள்ளப்படவுள்ளது. அதற்காக இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்படும்.

இவ்விடயத்தை விரிவாக ஆராய்வதற்காக முதலமைச்சர்கள், அமைச்சர்களின் செயலாளர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஒன்றுகூடி, குழுவொன்றை நியமிக்கவுள்ளனர். அக்குழுவின் ஆலோசனைகளுக்கமைய இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# புலிகளின் வவுனியா தலைவர்களுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

## அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

வவுனியா,செப்.26

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற் பொறுப்பாளர் எழிலனுக்கும் இடையே சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் புலிகளின் வவுனியா அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்றது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், இராஜாகுகனேஸ்வரன், புலிகளின் நிர்வாக துணைப் பொறுப்பாளர் இளஞ்சேகரன், வவுனியா நிர்வாகப் பொறுப்பாளர் கானகன், மன்னார் மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ஜங்கரன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத விடயங்கள், எதிர் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து அங்கு ஆராயப்பட்டதாக புலிகளின் வவுனியா அரசியல் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார். (எ)

# யாழ். - கண்டி வீதி திறந்திருக்கும் நேரங்களில் மாற்றம் எதுவுமில்லை

கொழும்பு,செப்.26

ஏ-9 (யாழ். - கண்டி) வீதி போககுவரத்துக்கு திறந்து வைக்கப்படும் ஏற்பாட்டில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

இவ்வீதி முழுநாளும் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்று வெளியான செய்திகளை மறுத்திருக்கும் அமைச்சு, திங்கள் முதல் சனி வரை காலை 7மணி முதல் மாலை 5.30 மணிவரை இந்த வீதி திறந்திருக்கும் என்று தெரிவித்திருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் இவ்வீதி போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்கும். ஏனைய பொது விடுமுறை நாள்களில் வீதி திறந்திருக்கும். (ஐ)


## முன்பள்ளி ஆசிரியை தேவை

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தில் கற்பிப்பதற்கு பாலர் கல்வியில் பயிற்சியும், முன் அனுபவமும் உள்ளவர்கள் குறித்த ஆவணங்களுடன் 29.09.2002 ஞாயிறு காலை 10.00 மணிக்கு மேற்படி நிலையத்திற்கு சமுகந்தரவும்.

(8741)


## மனமகிழ்வடைகின்றோம்

எமது ஒன்றிய உறுப்பினர்களான

லயன் இரா.இராஜேஸ்வரன்

திரு.சூ.எட்வேட் றெஜினோல்ட்

செல்வி சுமித்திரா குமாரு

ஆகியோர் உதவிப் பதிவாளர்களாகவும்

திரு.வ.சிவகுமாரன் அவர்கள்

உதவி உள்ளகக் கணக்காய்வாளராகவும்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டதையிட்டு பெரு மகிழ்வடைகின்றோம்.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக*
*எழுதுநர் தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியம்.*

க.சயந்தநாதன்
இணைச் செயலாளர்

(C-23971)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 28 • 09 • 1959



உதிர்வு 27 • 08 • 2002

### அமரர் அரியரத்தினம் விக்கினேஸ்வரன்

அன்பான முகத்தை அரவணைக்கும் இதயத்தை
இனி நாம் காண்பது எப்போது?
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

எங்கள் அன்பு மகனின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி நேரில் அஞ்சலி செலுத்தியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (26.09.2002) வியாழக்கிழமை நண்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள், மைத்துனர்மார், பெறாமக்கள், மருமக்கள்.

*அங்களப்பாய்,*
*இணுவில் கிழக்கு, இணுவில்.*

தகவல்: அ.செல்லம்மா (தாய்)
அ.ஸ்ரீபாலச்சந்திரன் (அண்ணா)

(8740)


**லக்ஷ்மி** இணுவில்.

*விக்ரம், கிரன், மனோரமா நடித்த*

**ஜெமினி** (ரீல்ஸ்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே.)

(8707)

**நாகம்ஸ்** கன்னாகம்

*(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)*

*விஜயகாந் (இருவேடம்), பிரபுதேவா, லிவிங்ஸ்டன், மீனா, கௌசல்யா நடித்த*

**வானத்தைப் போல** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன், சாக்ஷி, கவுண்டமணி நடித்த

**வேதம்** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)

(C-23810)


# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் நவரத்தினம்

கோண்டாவில், நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நவரத்தினம் அவர்கள் நேற்று (25.09.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சோமசுந்தரம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மராணி, சிவதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - நாகம்மா தம்பதிகளின் (பிரபல வர்த்தகர்) மருமகனும் தர்மலிங்கத்தின் மாமனாரும் தர்மினி (மாநகரசபை - கொழும்பு), தர்மிந்தன் (சேவாலங்கா), தர்ஷினி (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
த.தர்மிந்தன் (பேரன்)
மு.சுப்பிரமணியம் (மைத்துனர்)

*சிவகுல வீதி,*
*உரும்பிராய்.*

(8745)

## பொன்னையா இரத்தினசபாபதி

*(முன்னாள் ஊழியர், வேலணை ப.நோ.கூ.ச.)*

வேலணை, 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னையா இரத்தினசபாபதி நேற்று (25.09.2002) கொழும்பில் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் மயூரனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பொன்னையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மகனும் மண்கும்பானைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் - தம்பதிகளின் மருமகனும் குணலட்சுமி, காலஞ்சென்ற தியாகராசா (அதிபர்) மற்றும் நடராசா (அதிபர், J.P.), சிவசுஸ்வரி (வேலணை), நமசிவாயம் (இந்தியா), நடராசதேவி (கொழும்பு), இராசலட்சுமி (மன்னார்), மாணிக்கவாசகர் (பொறியியலாளர், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2002) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
பொ.நடராசா J.P. (சகோதரன்)

*89/8, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(8744)

## நவரெத்தினம் இரத்தினம்

(சின்னத் தங்கச்சி)

உடுவில், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் இருபாலை, டச்சு றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நவரெத்தினம் இரத்தினம் அவர்கள் நேற்று (25.09.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரெத்தினத்தின் அன்பு மனைவியும் மற்றும் அடியவரதன் (ஜேர்மனி), சண்முகவரதன், கமலாம்பிகை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற முத்தம்மாவின் சகோதரியும் மற்றும் தனலட்சுமி, உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசலிங்கம் (நீதிமன்று பதிவாளர்) அவர்களின் சிறியதாயாரும் விஜூசியா, பானுகோபன், பிரகாஷ், சகானா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் - சண்முகவரதன் (சின்னவரதன்)

*டச்சு றோட்,*
*இருபாலை.*

(8746)


# எக்ஸ்போ ஏவியேஷன்

சமாதான முன்முயற்சியை ஆதரித்து யாழ்ப்பாணத்துக்கான விமானக்கட்டணங்களில்

விசேட குறைப்புக்களை மேற்கொண்டுள்ளது!

| | | |
|---|---|---|
| இருவழி சிக்கன வகுப்புக் கட்டணம் | ரூபா | 4550/= |
| ஒரு வழி " " | ரூபா | 2425/= |
| இரு வழி தெரிவு வகுப்புக் கட்டணம் | ரூபா | 6900/= |

EXPO ஏவியேஷனாகிய நாங்களே யாழ்ப்பாணத்துக்கான முதலாவது மக்கள் விமானப் பயணத்தை மீள ஆரம்பித்துள்ளவர்களும் சமாதான நடவடிக்கைகளை மதித்து, ஆதரவளிப்பதுடன், யாழ். வாழ் மக்கள் உள்ளிட்ட இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் புது நம்பிக்கையையும் கொண்டுவருகிறோம். சமாதான நடவடிக்கையை ஆதரிக்கும் ஓர் அம்சமாகவே எமது யாழ்ப்பாணத்துக்கான விமானக் கட்டணங்களை உடனடியாகக் குறைத்துள்ளோம். இந்நிகழ்வின் மூலம் வடக்குக்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குமான உறவினை மேலும் பலப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

ஞாயிறு தவிர்ந்த எல்லா நாள்களிலும் யாழ்ப்பாணத்துக்கான விமானப் பயண சேவை

பயண ஒழுங்கு:

| | | |
|---|---|---|
| புறப்படுதல் இரத்மலானை | - | 8.00 மணி |
| வருதல் யாழ்ப்பாணம் | - | 9.00 மணி |
| புறப்படுதல் யாழ்ப்பாணம் | - | 10.00 மணி |
| சேருதல் இரத்மலானை | - | 11.00 மணி |

EXPO AVIATION ஆகிய நாங்கள் உங்களுக்கு

பாதுகாப்பான, சௌகரியமான விமானப் பயணத்தையும் தாராளமான பயணப் பொதி சலுகைகளையும் சிக்கன, தெரிவு வகுப்புக் கட்டணங்களையும், சுகமான விமானப் பயண அனுபவத்தையும், நம்பகத்தன்மையையும், சரியான 100 சத வீத நேரந்தவறாமை உட்பட்ட சௌகரியமான புறப்படல் - சென்றடைதலுடன் சிநேகபூர்வமான உள்ளகச் சேவை வசதிகளையும் வழங்குகின்றோம்.

முன்பதிவுகளுக்கும் விமானச் சீட்டுக்கும்

EXPO AVIATION (Pvt)Ltd.

EXPO AVIATION (Pvt)Ltd. : 464, Galle Rd., Colombo - 3. Tel.: 074-512666
EXPO AVIATION HANGER : Ratmalana Airport. Tel.: 632389/632890
EXPO AVIATION (Pvt)Ltd. : 1E, Stanley Road, Jaffna Tel: 021-2223891, 077-730555 077-730666

(C-23970)

# பொ. ஐ. முவுடன் மு. கா. ஒட்டுறவா? அந்தப் பேச்சுக்கே இடமில்லை!

## சரத் அமுனுகமவுக்கு நூர்தீன் மசூர் நெத்தியடி

கொழும்பு,செப்.26

எந்த ஒரு முஸ்லிம் எம்.பியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பின்னால் செல்லப்போவதில்லை. தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் பிரதமரின் கரங்களைப் பலப்படுத்துவோம். மு.காவின் 10 எம்.பிக்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பக்கம் தாவப்போகிறார்கள் என்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சரத் அமுனுகமவின் கூற்று விசமத்தனமானதும் உண்மைக்கு மாறானதுமாகும் என வன்னிப் புனர்வாழ்வு மீள்குடியமர்வுக்கு உதவி வழங்கும் அமைச்சர் நூர்தீன் மசூர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இறத்தோட்டையில் நடைபெற்ற பொ.ஐ.மு. புனரமைப்புக் கூட்டத்தில் பேசிய சரத் அமுனுகம எம்.பி., பத்து முஸ்லிம் எம்.பிக்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைவதற்கு மகாநாயக்கரின் முன் உறுதி அளித்துள்ளனர் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக அமைச்சர் நூர்தீன் மசூருடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசிய முன்னணி மேற்கொண்டுவரும் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் முழு ஆதரவையும் வழங்கி வருகிறது. இதுமட்டுமன்றி தேசிய ஐக்கிய முன்னணியின் ஆதரவையும் தலைவர் ஹக்கீம் பெற்றுள்ளார். எமக்குள் எந்தப் பிளவும் இல்லை.

அரசின் சமாதான முயற்சிகளை குழப்பவும், பொதுமக்களை அதைரியப்படுத்துவதற்காகவுமே சரத் அமுனுகம எம்.பி உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிட்டுள்ளார்.

எந்த ஒரு முஸ்லிம் எம்.பியும் பொ.ஐ.மு. தலைவர்களை சந்திக்கவும் இல்லை. அவர்களுடன் இணைவதாக வாக்குறுதி அளிக்கவும் இல்லை. சரத் அமுனுகம எம்.பியின் கூற்று அப்பட்டமான ஒரு கட்டுக்கதை - என்றார் அமைச்சர் நூர்தீன் மசூர்.

(ஐ-12)

## சீரடி பாபா பிறந்ததின விழா

யாழ்ப்பாணம்,செப்.26

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் சீரடி பாபாவின் பிறந்ததின ஜெயந்தி விழா கொண்டாடப்படும்

விழாவில் 'குரு பக்தி' என்னும் தலைப்பில் யோகிராஜன் உரையாற்றுவார். நண்பகல் ஹோமமும் நாராயண சேவையும் இடம்பெறும். (ஐ)

## திலீபனின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டது. அவ்வேளை, புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் படகில் ஏறுவதற்காக வந்தார். அவரைக் கடற்படையினர் தடுத்தனர். அதைக் கண்டு பொதுமக்கள் மீண்டும் படையினருடன் வாக்குவாதப்பட்டனர். பின்னர் புலிகளின் உறுப்பினர் படகில் ஏற அனுமதிக்கப்பட்டார். (ஐ)

## களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கவுள்ளனர்.

தமது வழக்கு விசாரணைகள், விடுதலை என்பன தொடர்பாக தீர்க்கமான முடிவு எதையும் எடுக்காமல் வெறுமனே தம்மைபார்வையிட எவரும் வரவேண்டாம் என்றும் - அவ்வாறு பார்வையிட வருவோர் கொண்டு வரும் பொருள்களை தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் -

கைதிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-12)


கிராம உத்தியோகத்தர் (G.S.)
பதவிக்கான பரீட்சைக்குரிய
பயிற்சி வகுப்பு
ஆரம்பம்: 28.09.2002
சனிக்கிழமை மாலை 3.00 மணி
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ். (8717)


## புலிகளுடன் இணைந்து பஸ்சேவை

கொழும்பு,செப்.26

ஏ-9(யாழ்.-கண்டி) வீதியில் புலிகள் இயக்கத்துடன் இணைந்து தனியார் பஸ் உரிமையாளர்கள் பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

இது தொடர்பாக தீர்மானிப்பதற்காக பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தலைமையில் தூதுக் குழு ஒன்று இன்று கிளிநொச்சிக்கு செல்லவிருக்கின்றது.

சில தினங்களுக்கு முன்னர் புளியங்குளம் பகுதியில் நடைபெற்ற பஸ் விபத்துத் தொடர்பாக புலிகளினால் கைது செய்யப்பட்டிருக்கும் தென்னிலங்கை பஸ் சாரதியின் விடுதலை குறித்தும், இத்தூதுக் குழு பேச்சு நடத்தவிருக்கிறது.

யாழ்.-கண்டி வீதியில் கூட்டு பஸ் சேவை நடத்துவது குறித்து இன்று தீர்மானிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தான் பிரதமராகப் பதவியேற்ற கையோடே, பிரதமர் அலுவலகத்தில் சமாதானச் செயலகம் ஒன்றை அமைத்தார்.

தற்போது சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றும் பேர்னாட் குணதிலக அதன் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார்.

அதேபோன்ற சமாதானச் செயலகம் ஒன்று புலிகள் தரப்பில் தனியாக அமைக்கப்படும் எனத் தெரிகின்றது.

கிளிநொச்சியில் அதன் தலைமையகத்தையும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மாவட்டம் தோறும் அதன் கிளைப் பணிமனைகளையும் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல் போன்ற நடவடிக்கைகளை ஒருங்கமைத்துச் செயற்படுத்தல் போன்ற விடயங்கள் இந்தச் செயலகத்தின் கீழ் கொண்டுவரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று கிளிநொச்சியில் ஜோன் வெஸ்ட்பேர்க்குடன் இடம்பெற்ற சந்திப்பில் இவ்விடயங்கள் குறித்து விரிவாகப் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

# இறுதிப் போட்டிக்கு இந்தியா!

ஐ.சி.சி. சம்பியன் கிண்ண இறுதிப் போட்டிக்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது. நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க அணியை 10 ஓட்டங்களால் இந்தியா தோற்கடித்தது. ஆர்.பிரேமதாஸ அரங்கில் பகல் - இரவு ஆட்டமாக இப்போட்டி நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. கங்குலி 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஷேவாக்கும் லக்ஷ்மனும் இணைந்து 2ஆவது விக்கெட்டுக்காக 60 ஓட்டங்களைப் பெற்றனர். ஷேவாக் 58 பந்து வீச்சுக்களில் 59 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தார். தொடர்ந்து லக்ஷ்மன், டெண்டுல்கர் ஆகியோரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அதன்பின் திராவிட், யுவராஜ், கைஃப் ஆகியோரின் உதவியுடன் இந்திய அணி 261 ஓட்டங்களைப் பெற்றது. தென்னாபிரிக்க அணி வெற்றி பெறுவதற்கு 262 ஓட்டங்கள் தேவையான நிலையில் துடுப்பெடுத்தாடியது. முதல் விக்கெட்டை 14 ஓட்டங்களுடன் அவ்வணி இழந்தது. ஆனால், 2ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹேர்சல் கிப்ஸ்"ம் ஜக் கலிஸ"ம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். 119 பந்துவீச்சுக்களில் 116 ஓட்டங்களைப் பெற்ற கிப்ஸ், உபாதை காரணமாக ஓய்வு பெற்றார்.

ஒரு கட்டத்தில் 96 பந்துவீச்சுக்களில் 80 ஓட்டங்கள் தேவையான நிலையில் தென்னாபிரிக்கா இருந்தது. எனினும், வீரேந்தர் ஷேவாக், ஹர்பஜன்சிங் ஆகியோர் தென்னாபிரிக்க ஓட்ட வேகத்தைக் கட்டுப்படுத்தினர்.

இறுதி ஓவரில் தென்னாபிரிக்காவுக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அதிரடி வீரர்களான குளுஸ்னரும், கலிஸ"ம் களத்தில் இருந்தனர். 6 விக்கெட்டுகள் கைவசமிருந்தன.

ஷேவாக் வீசிய அந்த ஓவரின் முதல் பந்தில் கலிஸ் சிக்ஸர் அடித்தார். இரண்டாவது பந்தில் அவர் ஆட்டமிழந்தார். கடைசிப்பந்தில் 11 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அப்பந்து வீச்சை உயரே தூக்கி அடித்து குளுஸ்னர் ஆட்டமிழந்தார்.

(ஐ)

## திலீபன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோயில் வீதியிலும் -

தீவகத்தில் புளியங்கூடல் மகாமாரி அம்மன் ஆலய வீதியிலும் -

வடமராட்சியில் மாலுசந்திப் பிள்ளையார் கோயில் முன்றிலிலும் உண்ணாவிரதங்கள் இடம்பெறவுள்ளன. உண்ணாவிரதத்தை அடுத்து அங்கு பொதுக்கூட்டங்களும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும். வேறு பல பகுதிகளிலும் உண்ணாவிரதம், பொதுக்கூட்டம் மற்றும் கலைநிகழ்வுகள் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறுவருட இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் சகலதுறை சார்ந்தவர்களும் கலந்துகொண்டு திலீபனின் பெருமையைப் பேணுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதற்கிடையே, யாழ்ப்பாணம் வணிகர் கழகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் -

இன்று காலை 9 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் நடைபெறும் தியாகி திலீபனின் நினைவுதின நிகழ்வுகளில் அனைத்து வர்த்தகர்களும் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என்றும் -

அத்துடன் இன்றைய தினத்தில் வர்த்தக நிலையங்களை மூடி, ஊழியர் சகிதம் உண்ணாவிரத நோன்பிலும் அதன் பின்னர் நடைபெறும் நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுமாறும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

திலீபனின் நினைவு தினம் குறித்த மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்.

(எ-4-10)

## நவம்பர் 6 இல் 'பட்ஜெட்'சமர்ப்பிப்பு

கொழும்பு,செப்.26

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டம் நவம்பர் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறைந்த வரி வீதத்தின் அடிப்படையில் அதிக வருமானங்களை ஈட்டித் தரும் கொள்கைக்கு அமைய வரவு-செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## 18,19ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை நீண்டகாலம் இழுத்தடிக்க வைத்து, அதன் மூலம் அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசுக்குத் தேவைப்படும் காலத்தை நீடிக்கச் செய்வதில் எதிர்த்தரப்பு முனைப்பாக இருப்பதாகக் கருதப்படுகின்றது.

அந்த முயற்சியின் காரணமாகவே உத்தேச 18ஆவது, 19ஆவது அரசமைப்புத் திருத்தங்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையில் மனுக்களைத் தாக்கல் செய்யும் உத்தியை எதிர்த்தரப்பு பயன்படுத்துவதாகவும் கருதப்படுகின்றது.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதியுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது.

அத்திகதிக்குப் பின்னர் தற்போதைய நாடாளுமன்றத்தை தான் விரும்பிய எந்த நேரத்திலும் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

அந்த அதிகாரத்தை வெட்டவே 19ஆவது அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்படுகின்றது.

எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் இந்தத்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு அரசுத் தரப்புக்கு வாய்ப்பளிக்க விடாமல் - காலத்தை இழுத்தடிப்பதற்காகவே - அந்தத் திருத்தத்திற்கு எதிராக அதிக எண்ணிக்கையில் மனுக்களில் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யும் உத்தியை பிரதான எதிர்க்கட்சிகள் தங்களது சட்டநிபுணர்கள் மூலம் மேற்கொண்டு வருகின்றன. (ஐ)


MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
GIT
General Information Technology
ஆரம்பம்
28.09.2002
பி.ப 3.00
மணிக்கு

க.பொ.த உயர்தரவகுப்பிற்கு அறிமுகமாகும் புதியபாடத்திட்டம்
SCW SCW SCW SCW SCW SCW SCW SCW SCW SCW

SIVAKI PROFESSIONAL INSTITUTION
யாழ்நகரில் பொறியியல் வகுப்புகள்

Computer Hardware Engineering
Assembling, Trouble Shooting & Networking (LAN)
செய்முறையுடன் கற்பிக்கப்படும்.
3200/=
பயிற்சி முடிவில் சித்தி எய்துவோருக்கு தராதரப்பத்திரம் வழங்கப்படும்.
விசேட சித்தி எய்துவோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
காலம்: 2 மாதம் நுழைவுத்தகுதி: G.C.E O/L
2 வருட உத்தரவாதத்துடன் புதிய Computer Assemble செய்து கொடுக்கப்படும்.
Computer சம்பந்தமான பிரச்சினைகளை (including service) தீர்ப்பதற்கு எமது நடமாடும் சேவையை நாடுங்கள்.
T.P: 077-722861, 077-662033 (8648)

Computer Software
MS Office 2000
Windows · Word
Excel · Powerpoint
Publisher
Desk Top Publishing
Windows · Pagemaker
Corel draw · photoshop
English Classes (Year 6 - 9)
ஆரம்பம்: 05-10-02
S.P.I
மேலதிக விவரங்களுக்கும், அனுமதிப் பத்திரத்துக்கும்
Diploma, Advanced Diploma சித்தி எய்துவோருக்கு முறையேLondon பல்கலைக் கழகத்தில் முதலாம் வருட, இரண்டாம் வருட அனுமதி.

Telecom & Electronics Engineering
City & Guilds "International" London June 2003
Examinations conducted by British Council Colombo
Certificate Level
நுழைவுத்தகுதி: G.C.E O/L
Diploma Level
நுழைவுத்தகுதி: G.C.E A/L
CAMPUS JUNCTION, PALALY ROAD, THIRUNELVELY.
T.P: 077-722861

NIRU TUITION CENTER
Station Rd, Kondavil
இணைந்த கணிதம்
சிக்கல் எண்கள்
By:செந்தில்நாதன்.B.Sc.
Fri. 4.30 - 5.30 (புதிய நேரம்)
ஆரம்பம்: 27.09.2002
(8735)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
முரளி, மீனா, வடிவேல், விவேக் நடித்த
நம்மவீட்டு கல்யாணம்
எம்மிடம் வெளிவரும் அனைத்து புதிய திரைப்பட ஒறிஜினல் V.C.D - 550/-
பதிவு செய்யப்பட்ட V.C.D - 300/-
V.H.S - 250/-
ITN
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(C3392)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.